padippakam

# அகதி
# AKATHY
## (REFUGEE)


Tamil Refugee International Network
தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பு

# INTERNATIONAL DIMENSION

22

1998 - 1

75p



" 1993க்குப் பின் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்துவது மனிதாபிமான செயல் அல்ல."

படிப்பகம்

# SRIKANTH & CO

Legal Aid

## SOLICITORS

### ADMINISTRATORS OF OATHS

557 HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX, HA0 2DW

Tel: 0181 795 0648 ( 5Lines) Fax: 0181 795 0649 Sri: 0831 195979 (Mobile)

*Civil & Criminal Litigation * Employment Matters * Landlord & Tenant Matters * Immigration Matters * welfare Benefits & Social Security Matters * Conveyancing * Commercial & Residential * Matrimonial Matters & Injunction * Traffic Offences * Personal Injury * Police Station representation

We have staff who can converse in the following languages
*Bengali * French * Hindi * Nepali * Punjabi * Sinhala * Tamil & Urudu
* Farsi * German * Gujarati * Kutchi * Kiswhahili
WE ALSO ARRANGE INTERPRETERS IN OTHER FOREIGN LANGUAGES

தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறையுடன் பணிபுரியும் அகதி சஞ்சிகையின் தொடர்ச்சியான வெளியீட்டுக்கு எமது ஆதரவுகள்

Legal Aid

Legal Aid

# RAJA & CO

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

295 Balham High Road,
Tooting Bec,
London SW17 7BA
TEL: 0181 682 2585
FAX: 0181 682 2575

padippakam

**Akathy Publications**
Tamil Refugee Centre
Community Centre
311 Fore Street
Edmonton N9 0PZ
Tel: 0181 373 6246
0181 373 6249
Fax: 0181 373 6250

**Editor**
K. Sitamparanathan

**Editor Layout**
M. Natkunathayalan

**Staff Writers**
S.S.Ganeshanandan
M.Markandan
Chanthira Raventheran
S. Sathiyanandaraja

**Editor Assistant**
Sarukesi Natkunathayalan

**Administration**
Tamil Refugee Centre

**Akathy** is published by the Akathy publications. The opinions expressed by contributors are not necessarily those of Akathy Publications. The designations used do not imply the expression of any opinion on the part of Akathy Publications concerning the legal status of a territory or of its authorities.

**Akathy** reseves the right to edit all articles before publication. Articles and Photos covered by copy right may be reprinted with prior permission.

# அகதியின் எண்ணத்தில்........................

## கெடுபிடியின்றிச் சென்ற 1997 ஆம் ஆண்டு - தமிழ் அகதிகள்

1993 ஆம் ஆண்டு ஜுலையில் கடந்த அரசினால் கொண்டு வந்து அமுலாக்கப்பட்ட தஞ்சம்கோருவார் மேன்முறையீட்டு வசதிகள் சட்டமூலத்தின் பின் இதுவரை காலமும் நிச்சயமான எதிர்காலமின்றி நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கும் தஞ்சம்கோரும் தமிழரின் எண்ணிக்கை இதுவரை ஏழாயிரத்தையும் கடந்து விட்டது. இவர்களில் 1993 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலும் இந் நாட்டுக்குள் வந்து தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்தவர்களும் அடங்குவர். இவ் விண ்ணப்பங்களில் சுமார் 3000 பேர்களினது வழக்குகள், 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும். கடந்த அரசு 93 , 96 ஆம் ஆண்டுகளில் இரண்டு வெவ்வேறான சட்டமூலங்களை நிறைவேற்றியது. இச் சட்டமூலங்களினால் தஞ்சம்கோருவோர் பிரச்சனையை கடந்த அரசு பெரும் பிரச்சனையாக்கிவிட்டது, என புதிய அரசு சாடுகின்றது. தஞ்சம்கோருவோரின் விண்ணப்பம் மீதான பரிசீலனை உடனடியாகச் செய்யப்பட்டு, முடிவுகள் ஆகக்கூடியது 3-6 மாதகாலத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டுமென புதிய அரசின் குடிவரவு தஞ்சம் சம்பந்தமான திணைக்களத்தின் அமைச்சர் தெரிவித்துள்ளார். நிராகரிக்கப்பட்ட அல்லது போலியான விண்ணப்பகாரர்களை நாட்டில் இருந்து அகற்றுவதற்கு தற்போதைய சட்ட நடவடிக்கைகள் தவறிவிட்டன. புதிய சட்டமூலமொன்று இதனை உறுதிப்படுத்தி கொண்டு வரப்படவேண்டிய அவசியத்தையும் அமைச்சர் அண்மையில் வலியுறுத்தியிருக்கின்றார். தற்போது தேக்கநிலை அடைந்திருக்கும் சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக முடிவு எடுக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் திரு ஓ விறயின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். இவ் விண்ணப்பங்களை துரிதகதியில் பரிசீலனை செய்து நிராகரிக்கப்பட்டவர்களை உடன் நாடு கடத்தப்படவேண்டுமென்ற சிவில் அதிகாரிகளின் கருத்தையும் அமைச்சர் வரவேற்கவில்லை. மாறாக நீண்டகாலங்களாக தமது விண்ணப்பங்கள் மீது எவ்வித முடிவுகளும் இல்லாமல் இருக்கும் நிலைமைக்கு அரசு காரணமே தவிர விண்ணப்பக்காரர் இல்லை. இதனால் இந்த விண்ணப்பங்கள் மீது மனிதாபிமான மென்மையான போக்கை அதிகாரிகள் கடைப்பிடிக்கவேண்டுமென்ற பணிப்புரையை அமைச்சர் வழங்குவார் என்ற எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு முன்னோடியாக பிரித்தானிய பணியகம் உட்பட பல தேசிய அகதிகளுக்கு பணிபுரியும் அமைப்புக்களின் சார்பில் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை அமைச்சர் கரிசனையுடன் ஏற்றுக்கொண்டுள்ளார். தனது முடிவுகளை எடுப்பதற்கு நேர அவகாசத்தையும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கிடையில் தமிழ் அகதிகள் தொடர்பாக தமிழ் அகதிகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஏற்கனவே பிரித்தானிய அகதிகள் பணியகத்துடன் தொடர்புகொண்டு குடிவரவு அதிகாரிகளை நேரில் சந்தித்தார்கள். இச் சந்திப்பைத் தொடர்ந்து மீண்டும் ஜனவரியில் சந்திப்பொன்றை ஏற்படுத்துவதென இருபகுதிகளும் ஒத்துக்கொண்டன். கடந்த 1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டாயமாக எந்த தமிழ் அகதியும் இலங்கைக்கு நாடு கடத்தப்படாதது குறித்து அமைப்புக்கள் திருப்திப்பட்டாலும் அடுத்த ஆண்டு எவ்வாறு அமையும் என்பதில் தான் அவை அதிக அக்கறை கொண்டுள்ளன.

ஆசிரியர்



படிப்பகம்

padippakam


# THANA & CO
## SOLICITORS

## ADMINISTRATORS OF OATHS

**CONTACT : T. THANA**

WE SPECIALISE IN
* IMMIGRATIOM * CRIME * CONVEYANCING * MATRIMONIAL * STATE BENEFITS * TRAFIC OFFENCES
* ADVICE & ASSISTANCE AT POLICE STATION

Legal Aid

**523-525 High Road, Tottenham,**
**London N17 6SB**
**TEL: 0181 808 1218 FAX: 0181 808 1240**

Legal Aid

# M.K.SRI & CO

*SOLICITORS & ADMINISTRATORS OF OATHS*
**5 Eastcote Lane, South Harrow, HA2 8BW**
**TEL: 0181 423 2141 FAX: 0181 933 1361**

We specialise in
*Immigration *Crime * Conveyancing *Residential & Commercial
* Police Station Advice & Assistance * Accident Claims
* Matrimonial matters * Welfare benefits & Social security matters

LEGAL AID WORK UNDERTAKEN

Legal Aid

SOLICITORS
**M.K. SRITHARAN, S.RAVINDRAN**
ASSOCIATE
**N. KRISHNARAJAH**




படிப்பகம்

padippakam



# INTERNATIONAL DIMENSION

Sri Lankan Tamils have crossed the high seas and national borders for trade and in search of wealth for centuries. They retain their connections with their home land, visiting it as often as is possible and finally to spend the last few years of their life. Like people all over the world they too agree with Rudyard Kipling's saying East or west home is best. In the recent past the European Union countries appear to be adopting the attitude that the people in third world countries think that Europe is the best place on the planet. Other industrialised countries are also slowly drifting towards that view point. During the days of the cold war many Americans and people in the industrialised western nations thought that all the Russians would rush into the western nations if they had a chance. This did not happen. Not all East Germans wanted to get to west Germany. Those who did try to get across or even expressed a desire to get to the west or more precisely escape from the socialist block were hailed as heroes when the Berlin wall was in place. Particularly the politicians.

There was a slight variation of this attitude towards the Sri Lankan Tamils in the period immediately following the pogrom of 1983. Political asylum seekers were given a cool welcome anyhow. A decade is probably the limit for a western nation to endure or grudgingly tolerate this situation. By 1993 the cool welcome had grown colder and it fact became positively hostile. New laws were being passed to prevent the entry of political asylum seekers, existing laws and regulations were being changed to make life difficult for political asylum seekers. The media systematically campaigned for the exclusion of foreigners into fortress Europe. They were gradually building an image of the refugees as a group of people coming from the third world in search of a higher standard of living in the industrialised countries. Adding credibility to this impression was the simultaneous reporting of famine and refugees fleeing in search of food and water in some African countries like Ethiopia, Somalia and Sudan. In the minds of the general European public there was no difference between the political asylum seeker and the refugee fleeing famine in search of food. Within the country exaggerated reports of "law breaking foreigners" was reported extensively implying that they were refugees. The reporting was done in such a way so as to create an impression that refugees are breaking the law as a routine, everyone one of them were fraudulently claiming welfare benefits and involved in drug trafficking and other criminal affiances. Some of these reports were exaggerations while others were blatant lies, but it served the purpose of the media in creating a bad impression about refugees in general.

When a research report commissioned by the Home Office on refugees stated that a majority of refugees were highly qualified and experienced professionals but were unemployed or are unable to seek employment due to a lack of knowledge of English and non-recognition of their qualifications in the U.K but most of them expressed a keen desire to learn the English language, an attempt was made to stop its



படிப்பகம்

padippakam


# VEERA & CO

## SOLICITORS

**EXPERTS IN IMMIGRATION, WELFARE, CRIMINAL, MATRIMONIAL AND CIVIL LITIGATION**

**SELLIAH VEERAVAGU LLB**

47, Hounslow Avenue
Hounslow
Middlesex TW3 2DZ
Tel: 0181 898 2262
Fax: 0181 893 4808

Legal Aid

24, Fernlea Road
Mitchem
Surrey CR 4 2HE
Tel: 0181 687 1154
Fax: 0181 687 1154

# MEHALA SOLICITORS

**ADMINISTRATORS OF OATHS**

Legal Aid

## We undertake

* Civil Litigation * Commercial Litigation * Immigration
*Personal Injuries *Conveyancing *Entertainment Law
* Residential & Commercial
* Police Station Advice & Assistance * Accident Claims
* Matrimonial matters
* Welfare benefits & Social security matters
For advice & assistance on all immigration matters

LAI HOUSE
9 BALHAM HIGH ROAD, LONDON SW 12 9AJ
TEL: 0181 675 7111
FAX: 0181 675 0777




படிப்பகம்

publication. When it was finally published after some delay it was brushed aside by some politicians as being as being incorrect. Passing laws and regulations and using administrative measures to refuse asylum to asylum seekers had by now gained the support of the general public. Politicians were increasingly aware of this. During general elections and bye elections little or no mention was being made of the refugee issue.

Applications for political asylum by Sri Lankan Tamils who were fleeing their country for fear of persecution, received varying levels of sympathy in the industrialised countries for their applications during the 1980s. In the early part of the nineties the change in attitude was becoming more apparent. Several unconvincing explanations were being put forward, but what was evident was the western European countries did not want to help asylum seekers as it was considered a potential threat to their well being.. The change in attitude was not because the fear of persecution had decreased but the refugees were considered undesirable. For the asylum applicants, the fear of persecution was increasing in the countries they were fleeing from.

The dilemma that the western nations face is multiple. They have to take up a position of being "do gooders" standing on a moral high ground proclaiming to the rest of the world that they will protect all those who are being wrongfully persecuted; they have to continue to manufacture and sell arms to these countries otherwise the unemployment level will rise; at the same time they want to prevent the foreigners taking up residence in their midst and becoming a part of their society and possibly bring down their standard of living and destroy their traditions.

The simultaneous presence of all these factors and the actions and reactions of human beings in different parts of the world gave rise to a lucrative but clandestine business. It was a trade or more appropriately termed racket, in which enterprising business men and women were prepared to sacrifice moral values for monetary gain. They made use of the desperate situation of fellow human beings to make money. It was a trade referred to as "Alien smuggling" As the name implies it was against the law. The unfortunate part, as in all such trade, was that all the parties concerned were willing and ready and sometimes forced for their own safety, to keep every move a secret. The trade has sometimes been referred to as a "crime without victims" though this is not always true. There are increasing number of instances in which the human cargo has become the victim of inhuman persecution and even murder.

To give a few examples of such actions in the recent past: the much publicised cases may be mentioned. A plane hijacked when it left Adais Ababa; but the plan fails and it crashed. There were several dead. At this point it is found that some of the victims were those being smuggled from one country to another in the alien smuggling trade. If there had been no accident nothing would have been revealed to the world. A boat load of people were intentionally drowned by ramming the boat with a bigger vessel. Here again those who were drowned were the "cargo" of alien smuggling. Once again it was the tragedy that revealed to the world that such nefarious activities are going on. In a container that was being transported in a lorry from an East European country to the western world, eighteen young people were found dead. A few others almost dead. If the container had not been opened, the others too would have died and the world would not have known anything about it.

This issue needs to be tackled at the very root: that is by stopping the conflict in the countries that create a situation where men and women are prepared to risk their lives to get out of the country of their birth in search of a safe haven.. This is only a dream in the minds of well meaning people. It will remain a dream as long as the people in power in the industrialised countries value the jobs of their citizens involved in the arms manufacture and sale as being much

padippakam

more important than the lives of thousands of innocent people in the third world countries.

What is the solution to this problem on a practical scale? The first step is to accept the reality that in the immediate future the arms trade will continue. It will probably expand rather than reduce. Secondly the western countries are increasingly hostile to the entry of asylum seekers into their countries. Thirdly the more developed countries that have the resources are not very keen on fighting the alien smuggling trade, because the victims are not their citizens. Taking these factors into consideration, the small but significant step that well meaning individuals and groups of people can do is to remove the veil of secrecy that envelopes the alien smuggling trade.

In the early part of August this year a group of delegates from several European countries including the United Kingdom met in a small town in Denmark to draft a plan of action to do just that. According to their plan the first thing to do was to set up a base point that will receive information from all over the world. The information would be verified and double checked for accuracy and authenticity. This was considered vital as any such programme has to be built on a foundation of credibility at all levels and at all times. The group decided on the name TAMIL REFUGEE INTERNATIONAL NETWORK (TRIN). They made several other significant decisions and took steps to carry the programme forward. TRIN would function from Denmark. They would establish a base or an office into which information can be fed from all parts of the world and at any time of the day or night. There would be facilities to check on the authenticity of the information received. TRIN would also have facilities to store information and retrieve any stored information at a moments notice. The office would function as a focal point from which information can be fed to the international media and at the same time receive information from the international media.

Planning is all well and good but to implement this plan the most important factor is the availability of financial and human resources. Both these are difficult to come by. An appeal has been launched for philanthropists and all well wishers to send their donations, contributions and any relevant information. The first and immediate task that was undertaken was to launch a research programme into the various facts and figures surrounding the loss of several lives in the Mediterranean sea on Christmas day of 1996.

The report on the conference to be published by TRIN will contain a draft constitution and the names of those elected to office in the Management committee. The report will include a copy of the letter sent to the United Nations High Commissioner for Refugees.

Meeting and socialising in the name of a good cause is all well and good. The question now is what next? After the meeting what has been done? Has anything been done to show the others that the people who met and talked so much mean business.? Even before the question is asked it must be said that the people involved have been able to convince some funding agencies of the need for the formation of such an organisation and the need for such a meeting. That itself is an achievement worth talking about.

The organisation has now improved on its list of contacts and mailing list. A committee member has already established reliable contacts in Germany and Switzerland. A comprehensive mailing list has almost been completed up to stage when only updating becomes necessary quarterly. Some information has already been collected about some individuals involved in the Christmas eve drowning in the Mediterranean sea..

TRIN has received reliable information about the deportation of some Sri Lankans from Norway . A letter of protest has been sent. Results of these are still awaited.

Akathy whole heartedly supports the noble ideals of the Tamil Refugee International Network. We wish TRIN all success in their endeavours to achieve their objectives.



படிப்பகம்

padippakam

# “1993க்குப் பின் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களை நாடுகடத்துவது மனிதாபிமான செயல் அல்ல.” –அகதிகளுக்கான அமைப்புக்களின் கூட்டமைப்பு

கடந்த கால கொன்சவேட்டிவ் அரசகாலத்தில் 1993 ஜுலை அமுலாக்கப்பட்ட தஞ்சம் கோருபவரின் மேன்முறையீட்டு சட்டமூலத்தினை தொடர்ந்து நிராகரிக்கப்பட்ட நிலைமையிலும் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படாமலும் இருக்கும் சுமார் 70000 தஞ்சம்கோரியோரின் விண்ணப்பங்கள் தொடர்பாக அதிகாரிகளின் உயர்மட்டத்தில் பெரும் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. தஞ்சம்கோரிய ஒருவர் தனது விண்ணப்பம் மீதான தீர்மானம் எடுக்கப்படுவதற்கு 4–5 வருடங்கள் காத்து இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தஞ்சம்கோரிய விண்ணப்பங்கள் ஆக்ககூட 6 மாத காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என புதிய அரசின் குடிவரவுகளுக்கு பொறுப்பான அமைச்சர் திரு ஓ விறைபிள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார். இதேவேளை இதுவரை காலமும் எவ்வித பரிசீலனையும் செய்யப்படாமல் இருக்கும் பல ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் தொடர்பாகவும் நிராகரிக்கப்பட்ட நிலைமையில் மேன்முறையீட்டு விசாரணைக்காக இருக்கும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பாகவும் தெளிவான முடிவை விரைவில் அமைச்சரும், அதிகாரிகளும் எடுக்க இருக்கின்றார்கள்.

## கடந்த 3 மாத காலத்தில் விரைவான பரிசீலனை

உள்நாட்டு குடிவரவு திணைக்களப் பகுதியினால் கடந்த ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி கடந்த மூன்று மாதகாலங்களில் சுமார் 16000 தஞ்சம்கோரியோர் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரை சுமார் 60000 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படாமல் தேக்கம் கண்டிருக்கின்றது. . மிகுதியாக இருக்கின்ற விண்ணப்பங்கள் இந்த வருடத்தில் பரிசீலனை செய்து முடிவெடுக்க முடியும் என்று உள்நாட்டு அலுவல்கள் காரியாலய அதிகாரிகள் நம்புகின்றார்கள். இதற்கிடையில் நாளாந்தம் புதிதாக வந்து குவியும் புதிய விண்ணப்பங்கள் தொடர்பாகவும் புதிய நடவடிக்கைகளை அமுல்படுத்த அதிகாரிகள் ஆலோசனை செய்து கொண்டு வருகின்றார்கள். புதிய சட்ட மூலங்கள் கொண்டுவரப்பட்ட காலத்தில் இருந்து ஐக்கியராச்சியத்திலுள்ள தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிக எண்ணிக்கையில் குறைந்துள்ளது. 1995ஆம் ஆண்டில் 43000 விண்ணப்பங்களும் 1996 இல் 29500 ஆக வும் இருந்தன. கடந்த ஆண டு முடிவில் 96ஆம் ஆண்டைவிட 30 வீதம் குறைவான விண்ணப்பங்களே இந்நாட்டில் தஞ்சம் கோரியவையாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

## 21785 மேன்முறையீட்டு மனுக்கள்

1996ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான காலத்தில் 21785 மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட தஞ்சம்கோரியோர் குடிவரவு பகுதியின் முடிவுகளுக்கு எதிராக மனுச்செய்து இருக்கின்றார்கள். இவற்றில் சுமார் 2000 வரையிலான இலங்கையரில் 99.9 வீதம் தமிழர்கள் அடங்குவர். 1993, 1996 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட தஞ்சம்கோருவோர் தொடர்பான சட்டமூலங்களில் தனிப்பட்டவரின் தஞ்சம்கோரும் விண்ணப்பம் தொடர்பாக சட்டப்பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து பெருந்தொகையான மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனைகளில் இருக்கின்றன. 1993–1996 ஆண்டு காலப்பகுதியில் சுமார் 6.000 தமிழர்கள் ஐக்கியராச்சியத்தில் தஞ்சம்கோரி விண்ணப்பம செய்துள்ளார்கள். இவர்களில் சுமார் 3000பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு திர்மானங்கள் எடுக்கப்பட்டன. இவற்றில் 2 வீதமானவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப் பட்டிருக்கின்றன. குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை குடிவரவு காரியாலய புள்ளிவிபரத்தில் குறிப்பிடாவிட்டாலும் அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கையைவிட இவை குறைவாகவே இருக்கின்றன.

## 18000 நாடு கடத்தல் உத்தரவுகள்

1993ஆம் ஆண்டு புதிய தஞ்சம்கோருவோர் சட்ட மூலம் அறிமுகப்படுத்தும் முன்பு சுமார் 13000 நிராகரிக்கப்பட்ட குடிவரவாளர்களும் தஞ்சம்கோரியோரும் நாடு கடத்தல் உத்தரவை பெற்று இருந்தனர். 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 18 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் புதிய அரசின் குடிவரவுப் பகுதிகளுக்குப் பொறுப்பான செயலாளர் திரு ஜக்



படிப்பகம்

padippakam

ஸ்ரோ அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நாடு கடத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும்படி செயலாளர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் நாடு கடத்தப்படும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும் கட்டாய வழியில் நாடுகடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக குறைந்ததாகவே உள்ளன. (குடிவரவு புள்ளி விபரங்களின்படி) விருப்பத்தின்படியும், கட்டாயமாகவும் இதுவரை நாடுகடத்தப்பட்டவர்கள் சுமார் 60 பேர் மாத்திரமே. புதிய அரசு பதவிக்கு வந்த பின்பு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பகாரர்களை நாடுகடத்துவதற்கு எடுக்கப்படும் துரித நடவடிக்கைகள் தொடர்பாக தொழிற்கட்சியின் பின் வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக சிறுபான்மை இனத்தை சேர்ந்த குடிவரவாளர்களைக் கொண்டுள்ள தொகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆட்சேபணையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

## 44000 தஞ்சம் கோரியோர் தலை மறைவு.

கடந்த 7 வருட காலத்தில் இந்நாட்டுக்கு தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்தோரில் சுமார் 44000 பேர் தலைமறைவாகிவிட்டதாக குடிவரவுப்பகுதி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 1989 ஆம் ஆண்டு முதல் சுமார் 250 000 பேர் தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்ததாகவும் இவர்களில் 10700 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டதாகவும் 13000 பேர்வரையில் நாடுகடத்தப்பட்டதாகவும் புள்ளவிபரங்களை ஆதாரம் காட்டி இச்சங்கம் தகவல்கள் வெளியிட்டன. இவ்வறிக்கையை வெளியிட்ட இச்சங்கத்தின் பிரதிநிதி திரு ரேன் தின்சி அவர்கள் தலைமறைவானவர்களில் சிறு தொகையினரே நாட்டைவிட்டு வெளியேறி இருப்பர் எனவும் பெரும்பான்மையோர் இந்நாட்டில் தலைமறைவாக வேலைவாய்ப்பு இருப்பிட வசதிகளை அனுபவித்து வருகின்றார்கள் என்று தெரிவித்தார். இதுவரை காலமும் கொண்டுவரப்பட்ட இந்த சட்டரீதியற்ற குடிவரவாளர்களும் பொய்யான தஞ்சம்கோருபவர்களும் இந்நாட்டிற்குள் வருவதைக் கட்டுப்படுத்த புதிய சட்ட மூலங்கள் கொண்டு வரவேண்டுமென புதிய அரசைக் கேட்டுக்கொண்டார்.

## 1993க்குப் பின்பு நிராகரிக்கப் பட்டவர்களை நாடு கடத்துதல்

இதுவரை காலமும் தஞ்சம்கோரிய நிலைமையில் எவ்வித முடிவுகளும் எடுக்கப்படாமலும் நிராகரிக்கப்பட்ட நிலைமையில் இருப்பவர்களையும் விரைவான தீர்மானம் எடுப்பதன் மூலம் இந்நாட்டிவ் தொடர்ந்து வாழ்வதற்கு அனுமதியற்றவர்கள் திருப்பியனுப்பப்படவேண்டுமென்ற செய்தியை புதிய அரசின் அதிகாரிகள் வெளியிட்டபோது இந்நாட்டில் அகதிகளுக்காக பணிபுரியம் தேசிய சர்வதேச அமைப்புக்களுக்கு பெரிதும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியது. அகதிகள் பணியகம் உட்பட பெரும்பான்மையான அமைப்புக்களை கூட்டமைப்பாக கொண்ட தஞ்சம்கோருவோர் உரிமை இயக்கம் இச் செய்தி தொடர்பாக கடும் எதிர்ப்பையும் ஆட்சேபனையையும் தெரிவித்தன. 1993ஆம் ஆண்டில் இருந்து தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்களை உடன் பரிசீலனை செய்யாது பெரும் தேக்க நிலையை ஏற்படுத்தியதற்கு முன்னைய அரசின் நிர்வாக சீர்கேடு காரணமே தவிர எவ்வகையிலும் தஞ்சம் கோரியோர் காரணமில்லை. இதனால் 1993க்கு பின் தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்துவது மனிதாபிமான செயல் அல்ல என அகதிகள் அமைப்புக்கள் அமைச்சருக்கு தெரிவித்துள்ளன.

## அமைச்சரின் சாதகமான போக்கு

குடிவரவு தஞ்சம் கோருவோர் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் திரு மைக் ஓ விறயின் அவர்கள் அகதிகள் அமைப்புக்களின் மேற்படி வேண்டுகோளை மிக அனுதாபனத்துடனும் சாதகமான முறையிலும் அணுகியுள்ளதாக தெரியவருகிறது.. கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற பாராளுமன்ற சகல கட்சிகளின் அகதிகள் விவகாரங்களுக்கு பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர்களின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் திரு ஓ விறைமின் பேசும் போது "தஞ்சம்கோருவோர் விண்ணப்பங்களை நிராகரிப்பதே ஒரு அரசின் கலாச்சாரக்கொள்கை என்ற அபிப்பிராயத்தை மாற்றவேண்டும். தஞ்சம்கோரியோர் தனது விண்ணப்பங்கள் மீதான தீர்மானங்கள் பெற நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலைமை பிழையானது. இது மாற்றப்பட வேண்டும். தஞ்சம்கோருவோர் விண்ணப்பங்கள் தனிப்பட்டவர்கள் ரீதியில் பரிசீலனை செய்யப்படவேண்டும். விண்ணப்பங்களுக்கு சார்பான சான்றுகள் முழுமையான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான நடைமுறைகளை உறுதி செய்ய புதிய அவசியமான சட்டமூலங்கள் கொண்டுவரவேண்டு மெனவும் தெரிவித்தார். அரசின் நீண்டகால இப் பிரச்ச னைகளுக்கு சமூகமான தீர்வை காண்பதற்காக அகதிகள் பணியகம் போன்ற அமைப்புக்களுடன் தான் தொடர்ந்து கலந்துரையாட வேண்டும்" எனக் குறிப்பிட்டார். தேக்க நிலைமையில் இருக்கும் தஞ்சம்கோரும் விண்ணப்பக்காரரை இங்கு நிரந்தரமாக வாழ அனுமதிப்பது, அரசியல் சமூக மட்டத்தில் பெரும் சர்ச்சைக்குரிய விடயம் எனினும் விண்ணப்பக்காரர் இங்கு வாழ்ந்த காலம், ஐக்கிய ராச்சியத்திற்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு போன்ற சில காரணங்களின் அடிப்படையில் சாதகமான தீர்மானங்கள் எடுக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் தனது தீர்மானங்களை அவசரமாக எடுக்க முடியாதென்றும், இவ்விடயம் அரசியல் வட்டாரத்தில் பெரும் விமர்சனத்தை உண்டாக்குமென்பதினால் போதிய நேர அவகாசத்தை அமைச்சர் கேட்டிருக்கின்றார். புதிய ஆண்டின் முற்பகுதியில் சில தீர்மானங்கள் எடுக்கப்படலாமென அகதி அமைப்புகள் எதிர்பார்க்கின்றன.




படிப்பகம்


padippakam

# மறுக்கப்பட்ட பாதுகாப்பு- விமர்சனங்களும் விசனங்களும்!!

*(ஒரு தொகுப்பு)*




அகதிகள் பணியக இயக்குனர் திரு. நிக் ஹாட்விக்



அகதிகள் பணியகத்தினால் கடந்த ஆண்டு பெப்ருவரி மாதத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட மறுக்கப்பட்ட பாதுகாப்பு என்ற தலைப்பிலான இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான அறிக்கைக்கு எதிராக கடும் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் கூடவே விசனங்களும், பல்வேறு அமைப்புக்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் முன்வைக்கப்பட்டன. இவற்றில் முக்கியமாக இந்நாட்டில் வாழும் சிங்கள தமிழ் வைத்தியர்களின் எதிர்–சார்பான விமர்சனங்கள் பிரிட்டிஷ் சஞ்சிகை ஒன்றில் கடிதங்களாக வெளிவந்தன. இவற்றைத் தொகுத்து அகதி சஞ்சிகை வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்



படிப்பகம்

padippakam

# துன்புறுத்தலுக்கு ஆளாகும சாத்தியம் சிறீலங்கா அகதிகளுக்கு இல்லை

ஆசிரியருக்கு,

பிரித்தானியாவில் அகதி நிலை கோரும் சிறிலங்கா மக்கள் சம்பந்தப்பட்ட குறிப்பு தவறான வழிக்கு திரும்புகின்றது. எனவே இது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல. கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுதல் விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுதல் சித்திரவதை செய்யப்படுதல் என்னும் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பான தமிழ் ஈழ விடுதலைப்புலி இயக்கத்தினுடைய பிரச்சாரத்தின் எதிரொலியாகவே இவை உள. எதிரியானவர் சிங்களவரோ தமிழரோ முஸலீம்களோ எவராயிருந்தாலும் கொலை செய்ய ஆயத்தமாக இருப்பது இந்த இயக்கம். இந்தப் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக சிறிலங்காவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் போர் நடைபெறுவது உண்மை தான். எனினும் ஏனைய பிரதேசங்கள் பல்லின மக்களுக்கும் பாதுகாப்பானவையே. கைதுசெய்தல் தடுத்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகள் தமிழர்கள் உட்பட எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்காகவே எடுக்கப்படுகின்றன. பயங்கரவாதக்கொடுமைகளின் உதாரணங்கள் கொழும்பில் மத்திய வங்கிக் கட்டடம் தகர்க்கப்பட்டமை. பிரயாணிகள் புகையிரதம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டமை, இதன் விளைவாக நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் சிங்கள மக்கள் பலியானார்கள். இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்திலும் நடைபெறுவதைத் தடுக்கும் கடமை அரசுக்கு உண்டு. அகதிகள் சபையின் இக்அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தவறான வாதத்தின் உண்மையை உணருகின்ற ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் போர்ப்பிரதேசம் தவிர்ந்த பகுதிகளில் சந்தோஷமாக வாழ்கின்றனர். சிறிலங்கா முழுவதிலும் வாழ்கின்ற மக்களில் கிட்டத்தட்ட 60 விகிதம் இவர்களே. அரசியல்வாதிகள், உயர்தொழில் புரிபவர்கள் ,சுயதொழில் செய்யும் சாதாரண பிரசைகள் இதில் உள்ளடங்குவர். கொழும்பிலுள்ள சட்டபூர்வமான அனைத்து தமிழ் கட்சித் தலைவர்களுக்கும் அரசு பாதுகாப்பு வழங்கியுள்ளது. ஏனெனில் தமிழ்ப்புலிகளின் கொலை அச்சுறுத்தலில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவே.

இந்த உண்மையை அறிக்கை வெளியிட்டவர் அறியார் போலும். கடந்த காலத்தில் பலருக்கு இந்த நிலை ஏற்பட்டது. இன்றைய அரசியல் வெளிவிவகார அமைச்சர் ஒரு தமிழர் ஆவார். சிறிலங்காவிலிருந்து வந்து அகதிகள் என அழைக்கப்படும் மக்கள் பொருளாதார அகதிகள் எனக் கொள்ளலாம். நிதி திரட்டும் பொருட்டு புலிகளினால் அனுப்பப்பட்டவர்கள் சிலர். கொழும்பில் துன்புறுத்தல், ஆபத்து உண்டு எனில் அகதிகள் என அழைக்கப்படும் பலர் விடுமுறைகளைக் கழிக்க எவ்வாறு அங்கேபோகமுடியும். சிறிலங்காவின் உண்மை நிலையை புலிகளின் பிரச்சாரத்திலிருந்து பிரித்து நோக்கினால் பிரித்தானிய அரசின் கொள்கை அதாவது சிறிலங்காவிலிருந்து வந்து அகதிநிலை கோருவோருக்கு அகதி அந்தஸ்து வழங்க மறுக்கும் கொள்கை முற்றிலும் நியாயமானது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

(ஒப்பம் பிரித்தானியாவில் தொழில் புரியும் 14 சிறிலங்கா வைத்தியர்களினால் கைச்சாத்திடப்பட்டுள்ளது.)

## இந்த விமர்சனமானது தென் ஆபிரிக்கா வெள்ளையர் சிறிது காலத்திற்கு முன் செய்த விமர்சனத்தை ஒத்துள்ளது.

ஆசிரியருக்கு

மேல் வெளியிட்டுள்ள குறிப்பை ஆச்சரியத்துடன் நோக்குகின்றேன். இது ஒரு சக்தியுள்ள அரசியல் கருத்தாகும். கையொப்பம் இட்ட 14 பேர்களும் சிங்களவராக இருப்பர் என்பதில் ஐயம் இல்லை. சிறிலங்காவில் நடைபெறும் பிரச்சனைகள் பற்றி ஆழ்ந்த அறிவு இவர்களுக்கு இல்லை போலும். இவர்களும் பொருளாதார குடியேற்றவாசிகளாக இருந்து கொண்டு தமிழ் வைத்தியர்கள் ஏன் சொந்த நாட்டுக்குத் திரும்பக் கூடாது எனக் கேட்கும் அதே நேரத்தில் தவறுதலாகவே என்னவோ பல நல்ல காரணங்களைக் காட்டியுள்ளார். தமிழர்கள் மட்டும் தான் புலிகளினால் பிரித்தானியாவுக்கு நிதிசேகரிக்க அனுப்பப்படுகின்றனர் என்று ஐயம் கொள்ளலாம். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாது தடுப்பதற்காகவே தடுப்புக்காவலில் வைக்கப்படுகின்றனர். என்று கூற்றுக்களை நோக்கும் போது சிறிலங்காவின் நீதித்துறையில் ஆழ்ந்த அவநம்பிக்கை வைக்கவேண்டியுள்ளது.

நான் தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக எனது



படிப்பகம்

padippakam

நாட்டிற்குள்ளேயே மூன்று தடவைகள் 1971-1983 ஆண்டுகளுள் பலவந்தமாக இடங்கள் மாறவேண்டி நேர்ந்தது. இதே நிலை தான் இன்று வடக்கு கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் வாழும் அநேக தமிழர்களுக்கும். ஆனால் எனது சிங்கள நண்பர்களின் நல்லெண்ணத்தில் எனது பாதுகாப்பு தங்கியிருந்தது. எனினும் வைத்தியத்துறையில் உயர்படிப்புக்குப் போய்ச் சேரும் நோக்கத்தைக் கைவிடவேண்டி வந்தது. சிறிலங்காவில் அநேகமான தமிழர்கள் போர்ப்பிரதேசத்துக்கு வெளியே சந்தோசமாக வாழ்கின்றார்கள் என்ற கூற்று புண்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களை மேலும் நிர்ப்பந்திப்பதாக உள்ளது. தொழில் புரிபவர்கள் நெருக்கடி மிக்க நகரங்களில், மொழி புரியாத நிலையில், வாழ்க்கைச் செலவும், பயங்கரவாதமும் உயர்ந்த நிலையில் தடுத்து வைத்தல் போர் பயம் எப்பவும் தாக்கப்படலாம் என்ற பீதியுடன் வாழும் நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அதேசமயம் அவர்களின் சொந்த வீடுகள் எறிகணை வீச்சுக்கு உள்ளாகி தரைமட்டமாக்கப்படாமல் இருந்தாலும் அங்கு செல்ல முடியாது. அங்கு வசதிகளும் இல்லை. பட்டப்பின் படிப்பை முடித்தபின் முதல் வேலையாக நான் நாடு திரும்புவதற்காக பயணச்சீட்டு பதிவு செய்தேன். ஆனால் பிறந்த நாட்டில் மூன்று தடவைகள் அகதியாக அலைந்த காரணத்தால் எனக்கு தைரியம் பிறக்கவில்லை. சிலர் சிறிலங்காவுக்கு போய் வந்துள்ளது. எனக்குத் தெரியும். இதன் மறுபெயர் தான் விடுமுறையைக் கழித்தல் என்பது ஆகும். அங்கு பிறந்த எமக்கு பலமான குடும்பப்பிணைப்புக்கள் உளது . பெற்றோரையோ உறவினரையோ நாம் சந்திப்பதற்கு ஒரே வழி வருவது வரட்டும் என்ற பாணியில் பிரயாணத்தை ஒழுங்கு செய்தல் ஆகும்.

என்னைப் பொறுத்தமட்டில் இம்சைக்கு எதிரானவன் புலிகளாலோ சிங்களப் படையினாலோ காடையர் கூட்டத்தாலோ எவ்வாறு ஏற்பட்டாலும் வெறுப்பவன். சிங்கள மக்கள் மேல் எனக்கு உண்மையான நேசம் உண்டு. ஏனெனில் நான் அவர்கள் மத்தியில் வாழ்ந்து தொழில் புரிந்தவன். ஆனால் தமிழர்களுக்கு சிறிலங்கா நல்ல இடம் என்று கூறும் சிங்கள மக்களை தென் ஆபிரிக்கா நாட்டு வெள்ளையர்களுக்கு ஒப்பாக கூறலாம். கறுப்பின மக்களுக்கு இனஒதுக்கல் கொள்கை எவ்வாறு நல்லதாக அமைந்ததென்று எமக்குத் தெரியும் தானே!

அனுப்புபவர்:- பிரித்தானியாவில் தொழில் புரியும் சிறிலங்காவைச் சேர்ந்தவர்.

## தமிழர் பொருளாதார அகதிகள் அல்லர். இவர்கள் நியாயமற்ற அரசியலால் வஞ்சிக்கப்பட்டவர்களே

ஆசிரியருக்கு,

வைத்தியரும் மதகுருவும் ஒரு குறிப்பிட்ட தேசத்துக்கு சொந்தமானவர் அல்லர். இவர்கள் எவ்வித அரசியல் அபிப்பிராயங்களுக்கும் அப்பாற்பட்டவர்கள் என்பது நெப்போலியனின் கூற்று.

பிரித்தானியாவில் வசிக்கும் 14 வைத்தியர்களின் குறிப்பு இங்கு வாழும் பல வைத்தியத்துறை சகோதரர்களையும் எரிச்சலூட்டியும் மனக்குழப்பமும் செய்துள்ளது. இப்படியான அரசியல் பக்கச் சார்பான கருத்தை ஒரு சஞ்சிகை எப்படிப் பிரசுரித்தது என்பது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. இதைச் சீராக்க விரும்புகின்றோம்.

1956ஆம் ஆண்டு தொட்டு சிறிலங்காவில் உள்நாட்டு அமைதியின்மை இருந்து வந்தது. 1958,1977,1983 ஆகிய ஆண்டுகளில் சிறிலங்கா அரசினால் நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளை உலகம் கண்டது. இதைத் தவிர கூடுதலாக தமிழர்கள் வாழும் பகுதிகளை அரசபடை ஆக்கிரமித்தது. அன்று தொட்டு அடாவடித்தனமும் பயங்கரவாதமும் தொடர்கின்றது. அரசாங்க ஆதரவுடன் நடைபெற்ற இந்த பயங்கரவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாக்க தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தத் தொடங்கினார்கள். 1990 தொடங்கி அரசாங்கம் மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியமானவற்றை எல்லாம் வடகிழக்கிற்கு செல்லவிடாது தடுத்தது. சிறிலங்கா ஒரு ஜனநாயக நாடு என்ற போர்வையில் ஒரு இராணுவ ஆட்சி நாடு என்பதை யார் தான் மறுப்பார்கள்.

இந்த வைத்தியர்களின் கூற்றுப்படி தமிழர்கள் வாழ தென்பகுதிகள் பாதுகாப்பானவையா? 1983 இல் தலைநகரான கொழும்பில் நடைபெற்ற குழப்ப நிலை போன்று இன்னொரு தடவை வருவதை எந்த ஒரு அரசாங்கமும் தாக்குப் பிடிக்குமா? இன்று கொழும்பில் வாழும் தமிழர்கள் கொடுக்கும் உயர்ந்த வாடகைப் பணத்தில் சிங்களச் சமூகம் தங்கியுள்ளது. இந்த கறுப்புப் பொருளாதாரத்தை அரசினால் குழப்ப முடியாது. படையினரின் அட்டூழியங்களினால் இந்தத் தமிழர்கள் சொந்த வீடுகளை விட்டு வந்து தெற்கில் புகலிடம் தேடியுமுள்ளனர். ஏற்ற தங்குமிடம் உணவு மருந்து என்பன இன்றி சொந்த நாட்டிலேயே ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஒரு குற்றமும் புரியாமல் நீதி விசாரணையும் இன்றி ஆயிரக்கணக்கில் வயது வேறுபாடு இன்றி தமிழர்கள் சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். அகதிகள் நிலையத்தின் அறிக்கை ஏன் பொய்யானதாக இருக்க வேண்டும்.



படிப்பகம்

கடந்த நான்கு தசாப்தங்களாக சிறிலங்காவில் மீண்டும் மீண்டும் நடைபெற்ற அரசியல் உள்நாட்டு அமைதியின்மை காரணமாக தமது பாதுகாப்பிற்காக தமிழர்கள் பிற நாடுகளில் குடியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உலகில் பல நாடுகளிலும் சிதறி வாழ்கின்றனர். பெருந்தொகையான தமிழர் வெளியேறியுள்ளனர். நாங்கள் பொருளாதார அகதிகள் அல்லர். சிறிலங்காவின் நீதியற்ற அரசியலால் பாதிக்கப்படட வர்களே. சுதந்திரம் பெற்ற காலம் தொடங்கி பிறந்த நாட்டிலேயே படிப்படியாக சமமான முறையில் வாழ்க்கை .இலலை. இக்குறிப்பை எழுதிய குறிப்பிட்ட அந்த 14 வைத்தியர்களும் தான் உண்மையான பொருளாதார அகதிகள் ஆவார்.

அனுப்பியவர்:– ஒரு வைத்தியர்

## இலேசான இலக்குகளாகி விட்ட தமிழர்கள்.

ஆசிரியருக்கு

சிறிலங்கா அகதிகள் துன்புறுத்தல் பற்றிய சுயாதீன மதிப்பீட்டை பற்றி வினா எழுப்பியுள்ளது. 14 வைத்தியர்களுமாக எழுதியுள்ள கடிதம் மேலும் மதிப்பீடு செய்தவர்களின் செய்கை தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் பிரச்சாரத்தை எதிரொலிக்கின்றதென்றும் பிழையான முறையில் குற்றம் சாட்டியுள்ளார்கள். இந்தப் பதினான்கு வைத்தியர்களினதும் ஞாபகசக்தி குறைவாக இருக்க வேண்டும். ஏனெனில் கொழும்பைச் சுற்றியுள்ள ஆறுகள் குளங்கள் கடல் என்பவற்றில் சிதறிய உடல்கள் காணப்பட்ட காட்சியையும் மறந்துவிட்டார்கள் போல் தோன்றுகின்றது.( நாட்டுக்கு மீள அனுப்பப்பட்டவர்களில் பலரை இலங்கை அதிகாரிகள் துன்புறுத்திய தையும் மானபங்கப்படுத்தியமையும் )
அண்மையில் நான் பிரித்தானியாவிலிருந்து சிறிலங்கா சென்று திரும்பியுள்ளேன். போர்ப்பிரதேசம் தவிர்ந்த இடங்களில் தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழகின்றார்கள் என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானதே. மாறாக அவர்கள் ஆயுதமேந்திய போர்வீரர், ஆயுதமேந்திய குழுக்களின் கெடுபிடிகளுக்கு பயந்தே வாழ்கின்றனர். தமிழர்கள் இலக்காகி விட்டனர் ஏனெனில் அதிகாரிகள் திரும்பத் திரும்ப ஒன்றுமே தெரியாதவர்கள் போல் செயலாற்றுவதால் கொழும்பிலுள்ள அப்பாவித் தமிழ் பொதுமக்கள் அவமரியாதை, தடுத்து வைத்தல், கண்மூடித்தனமான கைது என்பனவற்றிற்கு உள்ளாக்கப்ப டுகின்றனர். எனது உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு தலையை மொட்டை அடித்து மானபங்கப்படுத்தப்பட்டார். அவருடைய குடும்பத்தவர் அவருடைய இருப்பிடம் கைதுசெய்த காரணம் போன்ற விபரங்களை அறிய பல தடவை முயற்சித்தபோதும் விபரங்கள் வெளியிடவில்லை. மேலும் இந்த வைத்தியர்கள் புரிந்து கொள்ள மறந்துவிட்ட விடயம் அதாவது அகதி என ஏற்றுக்கொள்ளப்பட்ட நபர்கள் தங்கள் பிறந்த நாட்டுக்கு பிரயாணம் செய்ய அனுமதி இல்லை என்பதே. சிறிலங்காவுக்கு வெளியில் வாழும் அகதிகளல்லாத சிறிலங்கா தமிழர்கள் தமது பெற்றோர் அல்லது உறவினரைப் பார்க்கவோ அல்லது விவாகம் இறப்பு போன்றவற்றில் கலந்து கொள்ளவோ மட்டும் சென்று திரும்புகின்றனர். ஒருவர் பயமோ பாதுகாப்பு இன்மையோ இல்லாமல் விடுமுறைகளைக் கழிக்க சிறிலங்காவைவிட மேம்பட்ட இடங்கள் பல உள்ளன.

அனுப்புபவர்:– சிறிலங்காவில் பிறந்து இப்போ பிரித்தானியாவில் பிரஜையாக தொழில் புரிபவர்.

## முன்னேறுகின்ற இனச் சுத்திகரிப்பு

ஆசிரியருக்கு

சிறிலங்கா வைத்தியர்கள் 14 பேர்களினாலும் எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் அன்றி சிறிலங்காவில் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை கஷ்டமானதே. மானபங்கமான சில கூற்றுக்கள் பொய்யானவை என நிரூபிப்பது அவசியமாகின்றது. உலகத் தொடர்பு சாதனங்கள் தமிழ்ப் பிரதேசங்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் அங்கு வாழும் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் எவ்வளவு தூரம் மறுக்கப்படுகின்றன என்பதை சர்வதேச சமூகம் அறியாத நிலையிலே உள்ளது.
1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் வெளியேறிய காலம் தொட்டு இத்தீவு ஒருவகை நரகமாக சீரழிந்து போயுள்ளது. பண்டைய இன வெறுப்பு மீண்டும் தலைதூக்கியும் சம சந்தர்ப்பம் மறுக்கப்பட்டும் தேசிய ஒற்றுமை குலைந்துவிட்டது. பெருந்தோட்டங்களில் வாழ்ந்த பல தமிழர்களுக்கு வாக்குரிமை நீக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் தாய்நாடான இந்தியாவுக்கு சம்மதமின்றி திருப்பி அனுப்பப்பட்டனர். நவீன உலகில் இதுபோன்ற நிகழ்வு வேறு ஒரு நாட்டிலும் நடைபெறவில்லை.
சிங்களம் மட்டும் சட்டம் சிறுபான்மையினரின் மொழியுரிமையைப் பறித்தது. சட்டசபையிலிருந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான தேர்தல் மற்றும் சுதந்திரமான உரிமைகள் கிட்டவில்லை. தமிழர்களின் சாத்வீக அபிப்பிராயபேதம் பலாத்காரத்தில் முடிந்தபோது ஆயிரக்கணக்கில் தமிழர்கள் உயிரிழந்தனர். தமிழர்களின் உடமைகளும் அழிக்கப்பட்டன. துன்புறுத்தலும் அவமானமும் நிறைந்த முப்பது ஆண்டுகளின் பின்

padippakam

தமிழ் ஆயுதப்படை உருவானது. இன்று அங்கு நடைபெறுவது உள்நாட்டுப்போர் என்பது உண்மையான தொன்றே. தமிழ்ப்போராளிகள் கையாளும் முறைகளை குறிப்பாகத் தற்கொலைப்படைப்பிரிவின் செயற்பாட்டைப் கவனத்தில் கொள்ளாமல் ஒதுக்கி விடமுடியாது.

கண்மூடித்தனமாக வானிலிருந்து குண்டு வீசுதல் தமிழ்ப்பகுதிகளுள் கடற்படையினர் எறிகணைகளை வீசுதல் போன்ற தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதச் செயல்கள் ஆட்சேபத்திற்குரியனவே.

அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் போரை முடிவு கட்ட ஒருமைப்பாடு கண்டு தேசிய ஒற்றுமையை அடைய ஆவன செய்தல் வேண்டும். ஆனால் கொழும்பு அரசு ஆயுதப் படைகொண்டு நசித்தும் அபிப்பிராயபேதம் கொண்ட தமிழரை அகற்றியும் செயலாற்றுவது கவலைக்குரிய விடயமாகும். அரச படையினரால் யாழ் நூலகம் எரியூட்டப்பட்ட செயலும் 1983ம் ஆண்டு தொட்டு தமிழ்ப்பகுதிகளில் அரச படைகளின் ஆக்கிரமிப்பும் அரசின் நோக்கத்தை சுட்டிக் காட்டுகின்றன. இன அழிப்பு தொடர்கின்றது. வடக்கு கிழக்கு பகுதிகளில் முன்னைய யுகோசிலேவியாவின் நிலைமையே காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் கொழும்புச் சிறைச் சாலையில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் படு கொலை செய்யப்பட்டனர். அரச படை யாழ்குடா நாட்டைக் கைப்பற்றிய நாட் தொடக்கம் 700க்கு மேற்பட்ட தமிழ இளைஞர்கள் இடம் தெரியாது மறைந்து விட்டனர். ஆயிரக் கணக்கானோர் தமது இடங்களை விடுத்து வேறு இடங்களில் தமது வாழ்க்கையை அமைக்கும் நோக்குடன் ஓடி விட்டனர்.

அகதிகள் சபை மனிதாபிமான முறையில் பரிவான முறையீட்டை பிரித்தானிய அரசுக்கு முன் வைத்த செயல் பாராட்டுக்குரியதே. குறிப்பிட்ட அந்த அனாமதேய வைத்தியர்கள் பதினான்கு பேர்களும் தமிழர்கள் பொருளாதார அகதிகளே என்று வெறுப்புக்குரிய முறையில் குறித்துள்ளார்கள். இவ்வாறு குறிப்பிட்ட இவர்கள் பிரித்தானியாவில் பொது சேவையாற்ற வந்தவராக இல்லை.

இன்றைய உலகில் மனித இனம் எதிர் கொள்ளும் மிகப் பெரிய அவசியமான பிரச்சினை அகதிகள் பிரச்சினையே. சர்வதேச சமூகம் ஒரே முகமாக முயற்சி எடுத்து தீர்க்கவேண்டியது இது. நாம் பிறந்த மண்ணில் மக்கள் யாவரும் பாதுகாப்பாக ஆபத்து இன்றி சுதந்திரமாக தம்முள் மறைந்திருக்கும் சக்திகளை ஒன்று திரட்டி முழுமையான வாழ்க்கை வாழவேண்டும்.

**ஒப்பம் ஓய்வு பெற்ற வைத்தியர்**

## சிறுபான்மையினரின் சட்டபூர்வமான உரிமைகளை அரசு மறுக்கின்றது

ஆசிரியருக்கு

தென் சிறிலங்காவில் தமிழர்கள் சந்தோஷமாக வாழ்கின்றார்கள் என 14 வைத்தியர்களும் கூறுகின்றார்கள். இக்கூற்று பிழையானது அகதிகளின் சபையானது பிரித்தானியாவிலுள்ள முக்கியமான அமைப்பு ஆகும். சிறிலங்காவுக்கு நல்லெண்ணக்குழு ஒன்று சென்று பரந்தளவில் கலந்துரையாடியதன் விளைவாக இந்த அறிக்கை அகதிகள் சபையினால் தயாரிக்கப்பட்டது. மனிதாபிமான அடிப்படையில் 14000 தமிழர்களுக்கு தங்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிரித்தானியா உள்விவகார அமைச்சினால் தமிழர்களுக்கு பாதுகாப்பு அவசியம் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளதே காரணமாகும்.

சிறுபான்மையினரின் சட்டபூர்வமான உரிமைகளை சிறிலங்கா அரசாங்கங்கள் மறுத்து வந்ததால் பிரச்சனை அதிகரித்தது. இன்றைய நிலைக்கு வந்துள்ளது. சிறிலங்காவின் பாதுகாப்புப் படையினரே சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் சித்திரவதை ஆட்கள் காணாமல் போதல் தடுத்துவைத்தல் பெருமளவிலான கைதுகள் என்பனவற்றிற்கு பொறுப்பு என்று 1996ஆம் ஆண்டில் அமெரிக்கா அரச திணைக்களம் வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது.

சட்ட விரோதமாக சிறைகளில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் பலரை விடுதலை செய்யுமாறு சிறிலங்கா மேல்நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது. தற்சமயம் 300க்கு மேற்பட்ட தமிழர்கள் மேலும் அநேகர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாத நிலையிலும் உள்ளனர். அவசரகாலச் சட்டத்திற்குக் கீழும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் இவர்கள் இப்படி வைக்கப்பட்டுள்ளனர். தடுப்புக் காவலில் வைக்கும் காலத்தை நீடிக்கவும் இச்சட்டங்கள் அதிகாரிகளுக்கு ஏற்றதாக உள்ளன.

சட்டங்களால் வழங்கப்படும் பாதுகாப்புக்களும் பாதுகாப்புப் படையினராலும் அரச படைகளாலும் மீறப்படுகின்றன. 1996 மார்கழி மாதம் மேல் நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட முடிவின்படி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பு செயளாளர் உட்பட அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதும் காவல் நிலையங்களில் சித்திரவதை சம்பவங்கள் தடையின்றி தொடர்ந்தன, என்று உயர்நீதிமன்ற நீதிபதி இராமநாதன் சென்ற நவம்பர் மாதம் கூறினார்.

தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் சம்பவங்களை அப்படியே சுட்டிக்காட்டிய அதேசமயம்

படிப்பகம்

padippakam

தண்டனையிலிருந்து தப்பித்தல் பெரும் கவலைக்குரியது என சர்வதேச மன்னிப்புச் சபை விவரித்துள்ளது. உதாரணமாக கொழும்பு பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமை நிலையத்தில் 35க்கு மேற்பட்ட தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர். மார்ச் மாதம் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார். குற்றம் சாட்டப்பட்ட 21 பொலிஸ் அதிகாரிகளும் உயர் சட்டமா அதிபர் பிரசன்னமாகவில்லை என்பதே தள்ளுப்பட்டதற்கான காரணம். உயர் சட்டமா அதிபர் வராமை நீதிக்கு தடை எனப் பிரகடனம் செய்யப்பட்டது. 1996 இல் அரசபடை குடாநாட்டைக் கைப்பற்றிய நாட்தொட்டு 500க்கும் மேற்பட்டோர் காணாமல் போய்விட்டார்கள் என்ற முறைப்பாடுகள் யாழ் அரச அதிபருக்கு கிடைத்திருக்கின்றன. தமிழ் பெண்களை கற்பழித்து கொலை செய்த காரணத்திற்காக பல போர் வீரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியர்களாகிய நாங்கள் அரசின் வடவன்னிப்பிரதேசப் பொருளாதாரத் தடையைப் பற்றி மிகவும் கவலையடைகின்றோம். அங்கு 150 000 தமிழ் அகதிகள் போதியளவு உணவின்றி மருந்தின்றி அடிப்படைத் தேவைகள் இன்றி வசிக்கின்றனர். அப்பிரதேசத்தில் இரு வைத்தியசாலைகள் இயங்குகின்றன. இங்கு உரிய மருந்துகள் வைத்திய உபகரணங்கள் இன்றி 110 பேர்கள் மார்கழி மாதத்தில் இறந்துள்ளார்கள்.

–ஒரு வைத்தியர்

## சிறிலங்காவில் மனித உரிமை நிலைமை பற்றி அகதிகள் சபையின் மதிப்பீடு மிகவும் சரியானதே.

ஆசிரியருக்கு

பிரித்தானியாவில் தொழில் புரியும் 14 சிறிலங்கா வைத்தியர்களின் கடிதம் பிரித்தானிய உள்விவகார அமைச்சு செய்த தப்பை மறுதலிப்பதாக உள்ளது. அதாவது பிரித்தானியாவில் அகதி நிலைகோரும் தமிழர்களை சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புவதில் அச்சம் இல்லை. அவர்கள் கொழும்பில் பாதுகாப்பாக வாழலாம். எனவே அரசியல் தஞ்சம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதே. கடிதத்தில் தமிழர்கள் வெறும் பொருளாதார அகதிகளே என்று வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்ற போதிலும் சித்திரவதை உட்பட பல துன்புறுத்தல்களுக் குப் பயந்து தஞ்சக் கோரிக்கை விடும் உண்மையான பலருள்ளார்கள்.

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் வைத்திய நிலையத்தில் அகதி நிலை கோரும் பலரை நாம் அண்மைக்காலங்களில் சந்தித்துள்ளோம். முழுமையான துஷ்பிரயோகங்களுக்கான சாட்சித்தடயங்கள் உள்ளன. அகதிகள் சபையின் மதிப்பீடு மிகவும் சரியானதே என்பதை நாம் ஐயமின்றி ஆமோதிக்கும் நிலையில் உள்ளோம்.

போர்ப்பிரதேசம் தவிர்ந்த பிரதேசங்களில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்கின்றனர் எனக் கடிதம் கூறுகின்றது. ஆனால் துன்புறுத்தல் சித்திரவதை போன்ற ஆபத்துக்கள் ஒருவருக்கும் இல்லை என நாம் கருதமுடியாது. சில சுயதொழில் புரிபவர்கள் அரசியல் வாதிகள் உயர் தொழில் புரிபவர்கள் போன்றவர்களுக்கு சிறிலங்கா பாதுகாப்பான இடம் என்பதை நாம் மறுக்கவில்லை. எனினும் இளைஞர்களுக்கு உள்ள நிலைமை வித்தியாசமானது. சந்தேகத்தின் பெயரால் பிடிபட்ட பல இளைஞர்கள் அரசபடைகளால் தகவல் பெறும் பொருட்டு கடும் வினாக்களுக்கு அதாவது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். இதே இளைஞர்களை புலிகள் பிடித்து சித்திரவதை செய்கின்றார்கள். காவல் படைக்கு இரகசியத்தகவல் கொடுப்பார்கள் என்ற ஐயத்தினால் இந்த இளைஞர்கள் இருபகுதியினராலும் ஒதுக்கப்பட்டு தீவின் எப்பகுதியிலும் பாதுகாப்பு இல்லாதவராகின்றனர்.

தமிழர்கள் உட்பட எல்லாச் சமூகத்தைச் சேர்ந்த அப்பாவித் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தமிழர்கள் அப்படி வைக்கப்பட்டுள்ளார்கள் என 14 சிறிலங்கா வைத்தியர்களும் வாதாடுகின்றார்கள். தமிழ்ப்புலிகளின் செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபட்டார்களோ இல்லையோ பெருமளவில் பிடிபட்டு விளக்கமின்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கும் செயலை ஆதரிப்பதற்காகவே இந்த வாதம் பயன்படுத்தப்பட்டுளளது. சட்ட நடவடிக்கை இன்றி மக்களை தடுத்து காவலில் வைத்தல் ஏற்றுக்கொள்ளக ்கூடியதொன்றல்ல. தடுத்து வைத்திருப்போரைச் சித்திரவதை செய்வது சட்டவிரோதமான செயலே. இருப்பினும் சிறிலங்காவின் உண்மையான நிலை இதுவே. பல பாதிக்கப்பட்டோரை நாம் லண்டனில் பரிசோதனை செய்த பின் உறுதிப்படுத்திய ஆதாரத்துடன் அகதிகள் நிலையம் பத்திரம் தயாரித்துள்ளது. ஏறகனவே கருத்தில் கொண்ட மனப்பாடத்தை நீக்கிவிட்டு தனித்தனியாகவும் முழுமையாகவும் விசாரனை செய்து தகுதியுடையவற்றை இனம் கண்டு அகதி நிலைகோரும் விண்ணப்பதாரிகள் எல்லோரும் போலி விண்ணப்பதாரிகள் எனத் தள்ளிவைக்காமல் செயற்பட சர்வதேச சட்டத்தின் கீழ் உள்விவகார அமைச்சுக்கு பொறுப்பு உண்டு.

ஒப்பம்: **சித்திரவதையால் பாதிக்கப்பட்டோரை கவனிக்கும் வைத்திய நிலையம் லண்டன்**



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# திருமண அடிப்படையில் செய்யப்படும் விண்ணப்பங்களின் தற்போதைய நிலைப்பாடு

எம். மார்க்கண்டன் . சட்டத்தரணி

தொழிற்கட்சி அரசாங்கம் பதவி ஏற்றபின் திருமண அடிப்படையிலான விண்ணப்பங்கள் பற்றி பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகப் பலர் எதிர்பார்த்து விளக்கம் தருமாறு கேட்கின்றனர். 5.6.1997 இலண்டனில் பாராளுமன்றத்தில் உள்நாட்டுக் காரியதரிசியினால் சில கொள்கை மாற்றங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இதுவரை காலமும் பிரித்தானியாவில் நிரந்தர வதிவுரிமை பெற்று பின் தங்கியுள்ள மூன்றாவது நாடுகளில் திருமணம் செய்து கொண்டிருந்தவர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தனர். இதுவரை காலமும் இவ்விண்ணப்பம் வெற்றி பெறுவதற்கான பொருளாதாரம் வீட்டுவசதி போன்றவை திருப்திகரமானதாக இருந்தாலும் பிரைமறி பேப்பர்ஸ் விதி (Primary purpose rule) என்று கூறப்பட்ட அடிப்படை நோக்க விதி என்றவொரு சட்ட ஊகத்தினால் பாதிக்கப்பட்டு வந்தன. இந்த விதியின் அர்த்தம் என்னவெனில் இத்திருமணத்தில் பிரதான நோக்கம் மூன்றாம் நாட்டுப் பிரஜை ஒருவரை இந்நாட்டிற்குள் குடியேற உதவுவது தான் என்பதாகும். இக்கொள்கைக்கு காரணம் இலங்கை இந்தியா பாக்கிஸ்தான் பங்களாதேஸ் மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்து இந்நாட்டில் நிரந்தர உரிமையைப் பெற்றுவிட்ட அநேகரும் தங்களுக்கும் தங்கள் பின் வந்தோருக்கும் தமது முன்னைய நாட்டில் திருமணம் செய்து வைப்பதன் மூலம் பரம்பரை பரம்பரையாக கோடிக்கணக்கானோர் இந்நாட்டை ஆக்கிரமித்து விடுவார்கள் என்ற பயமே ஆகும். இந்தக் கொள்கை எந்தச் சட்டத்திலும் எழுதப்பட்டிருக்கவில்லை. நிர்வாகப் பணிப்புரைகள் மூலம் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்றவிதத்தில் இக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. பணக்கார நாட்டில் திருமணம் செய்துகொள்வோருக்கு இப்பிரச்சனை இருக்கவில்லை முன்னேற றம் அடையாத நாட்டின் விண்ணப்பதாரிகள் ஏனைய சகல தேவைகளையும் பூர்த்தி செய்தாலும் 99 சத விகிதத்தினர் விசா மறுக்கப்பட்டனர். அநேகரின் கண்டனங்கள் காரணமாக 1992 ஆம் ஆண்டு சிறிது மாற்றம் செய்யப்பட்டது. திருமணம் ஐந்து வருடங்கள் நிலைத்திருந்து பிள்ளைகளும் பிறந்திருந்தால் மாத்திரம் விசா வழங்கப்பட்டது. பொதுவாகத் திருமணம் செய்து கொண்ட ஆண் பெண் பாலோர் மூன்று வருடங்கள் முதல் ஐந்து வருட காலத்தின் பின்பே ஒன்று சேர்ந்தனர். ஒரு சிலருக்கு விரைவில் விசா கிடைத்திருக்கின்றது. காரணம் தகுந்த சட்ட ஆலோசனை பெற்று இந்த விதியை மறுதலிக்கக் கூடியதாக சான்று வழங்குவதன் மூலம் அதாவது நாம் ஏற்கனவே காதலர்கள் அல்லது எமது குடும்ப வழக்கப்படி திருமணம் முடிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது என்றும் இத்திருமணம் தரகர் மூலமாகவோ சீதனத்திற்காகவோ செய்யப்படவில்லை என்றும் நிருபிக்கப்படவேண்டும். இன்று இப்பிரச்சனை நீக்கப்பட்டுவிட்டது. 1997ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் திகதியிலிருந்து எமது திருமணம் உண்மையானது. இந்நாட்டில் பொதுநிதிக்குப் பாரமின்றி சீவிய வசதியும் குடியிருப்பு வசதியுமுண்டு என நிரூபித்தால் விசா கிடைக்கும். இக்காரணத்திற்காக முன்பு விசா மறுக்கப்பட்டு மேல்முறையீட்டில் இருந்த வழக்குகள் எல்லாம் இடைநிறுத்தப்பட்டு விசா வழங்கப்பட்டது.

நாம் இதுவரை பார்த்தது பிரித்தானியாவில் பிரஜா உரிமை பெற்றவர்கள் அல்லது நிரந்தர வதிவுரிமை பெற்றவர்கள் திருமணம் செய்த சந்தர்ப்பங்கள் பற்றியதாகும். அடுத்ததாக இந்நாட்டில் அகதி அந்தஸ்து அல்லது மட்டுப்படுத்தப்பட்ட விசேட விசா வழங்கப்பட்டவர்கள் பற்றிய நிலைமையை ஆராய்வோம். இவர்கள் இந்த நாட்டில் நிரந்தர விசா இல்லாதவர்கள் என்ற காரணத்தினால் இவர்கள் சொந்த நாட்டிற்கு செல்லவோ புதிதாக திருமணம் செய்து துணைவரைக்



படிப்பகம்

padippakam

கொண்டுவரவோ முடியாதிருந்தது . மனிதாபிமான அடிப்படையில் தமது மனைவி மக்களுடன் குடும்பம் ஒன்றிணைய வசதி வழங்கப்பட்டது. பூரண அகதி அந்தஸ்தைப் பெற்றவர்கள் தொழில் வீடு போன்ற வசதிகள் இல்லாவிடினும் கூட உடனடியாக விசா வழங்கப்பட்டது. ஆனால் விசேட விசா கிடைத்தவர்கள் நான்கு வருட விசா முடிவடைந்து மேலும் மூன்று வருட விசா நீடிப்பு கிடைத்தபின்பே அதுவும் போதிய தொழில் சேமிப்பு வீட்டுவசதி உண்டெண்றும் பொது நிதியத்திற்கு பாரமின்றி குடும்ப பாரத்தைப் பராமரிக்க முடியும் என்றும் நிருபித்தால் அதன் பின்பே விசா வழங்கப்பட்டது. தொழிற்கட்சி அரசாங்கம் வந்த பின் சட்டத்தில் ஏதும் மாற்றம் செய்யப்படாவிடினும் வேறாரு நாட்டில் புதிதாக திருமணம் செய்துகொண்ட தமபதிகளுக்கு விசா வழங்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதுவரையில் இந்த நாட்டில் உள்ள ஒருவர் சொந்த நாட்டில் திருமணம் முடித்து ஒன்று சேரல் பற்றிப் பார்த்தோம். இனிமேல் இந்த நாட்டில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள். அரசியல் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு மேல் முறைமீட்டில் இருப்பவர்கள் பற்றிய பிரச்சனைகளை ஆராய்வோம்.

முன்னைய அரசாங்கத்தின் கீழ் சட்டவிரோதமாகக் குடியிருந்து வெளியேற்றல் கட்டளை கொடுக்கப்பட்டவர்கள் இங்குள்ளவர்களைத் திருமணம் செய்த காரணத்திற்காக விசா பெற முடியாமலிருந்தது. அண்மைக்கால ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இந்த நடைமுறைக்காகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. ஐரோப்பிய மனித உரிமை மகாநாட்டு உடன்படிக்கையின் 8 ஆவது அத்தியாயத்தின்படி குடும்பத்தைப் பிரிப்பது சட்டவிரோதமாகும் என்று தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. அத்தீர்ப்புக்களில் ஒரு தனி நபரின் குடிவரவு சட்ட விரோத நடவடிக்கை எவ்வளவு பாரதூரமாக இருந்தாலும் குடும்பத்தைப் பிரித்தல் நீதியாகாது என்று கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக 1993ஆம் ஆண்டு தைமாதம் உள்நாட்டுத் திணைக்களத்தினால் கொள்கை சுற்று நிருபம் வழங்கப்பட்டது. அவற்றின் சுருக்கம் பின் வருமாறு:-

நாடு கடத்தல் கட்டளை வழங்கப்பட்டவர் திருமணம் முடித்திருந்தால் ஒவ்வொருவரும் தனித்தனியே திருமணம் பற்றி விசாரிக்கப்பட்டு முடிவெடுத்த பின்பே நாடு கடத்தப்படவேண்டும்.

**2. ஒருவர் திருமணம் செய்து நிரந்தரமாகவும் ஒன்றாகவும் வாழ்ந்தால் பின்வரும் சந்தர்ப்பங்களில் நாடு கடத்தல் ஆகாது.**

**1. நாடு கடத்தும் நடிவடிக்கை எடுப்பதற்கு முன் மணம் முடித்திருந்தால்**

**2. திருமணம் அல்லது ஒன்றாகக் குடும்பமாக வாழ்ந்து 2 வருடம் முடித்திருந்தால்**

**3. இந்நாட்டில் நிரந்தரமான துணைவர் சிறுவயதிலிருந்தே இங்கு வாழ்ந்திருந்தால்**

**4. ஒரு பிள்ளையாவது இந்நாட்டுப் பிரஜா உரிமைக்கு உரியவராயிருந்தால்**

**5. துணைவி கர்ப்பமாக இருந்தால்**

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டவிரோதமாக குடியிருந்தவர் கிரிமினல் குற்றங்கள் புரிந்திருந்தால் தவிர அவரின் பழைய சரித்திரம் கவனத்திற்கு எடுக்கப்படமாட்டாது. 1993ஆம் ஆண்டு முதல் இக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் தொழிற் கட்சி அரசாங்கம் பதவியேற்றபின மேலும் நெகிழ்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவது தெரிகின்றது.

அடுத்ததாக அகதி விண்ணப்பம் கோரி மறுக்கப்பட்டவர்கள் மேல்முறைமீட்டில் உள்ளவர்கள் அல்லது இன்றும் தீர்மானம் எடுக்கப்படாதவர்கள் பற்றி ஆராய்வோம். 1996ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அகதி சட்டத் திருத்தத்தின்படி விசா எந்நோக்கத்திற்கு வழங்கப்பட்டதோ வேறோரு நோக்கத்திற்கு மாற்றப்பட முடியாது என்று இருந்தது. அதாவது சொந்த நாட்டிலிருந்து வரும்போது சுற்றுலாப்பயணி அல்லது மாணவர் அல்லது திருமணம் போன்ற ஒன்றிற்காக விசா வழங்கப்பட்டிருந்தால் இங்கு வந்த பின் வேறு ஒன்றிற்கு மாறமுடியாது. இதன்படி இங்கு வந்த அகதிகள் பலர் திருமணம் செய்து விண்ணப்பித்தபோதெல்லாம் நீங்கள் திருமணத்திற்காக விசா பெற்று வந்திருக்கவில்லை ஆகவே திருமண அடிப்படை விசா தரமுடியாது என்று கூறப்பட்டது. ஆனால் தொழிற்கட்சி அரசாங்கம் பதவியேற்றபின் மேல்முறைமீடு தோல்வி கண்டபின் திருமணம் செய்தவர்கட்கு கூட விசா வழங்கப்பட்டுள்ளது. முன்பு திருமண விசா மறுக்கப்பட்டவர்கள் கூட தொழிற்கட்சி அரசாங்கம் வந்த பின் விண்ணப்பித்து விசா பெற்றுள்ளார்கள்.

முடிவாக பார்க்கும்போது தொழிற்கட்சி அரசாங்கம் பதவி ஏற்றபின் திருமணம் முடித்தவர்கட்கு பலவிதத்தில் சாதகமான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.




படிப்பகம்

padippakam

# யாழ்ப்பாணம் இருந்து வார்சோ வரை

**ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் இருந்து வெளிவரும் அகதி (Refugee) சஞ்சிகையில் ஜெயகுப் புரோட்டனஸ்கி அவர்களினால் நேர்காணல் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்ட ஆக்கத்தை அகதி சஞ்சிகை நன்றிக் கடமையுடன் வெளியிடுகின்றது.**

**நன்றி- Refugee**



சிறிலங்காவிலுள்ள யாழ்ப்பாணப்பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ் குடிமகன் இராசரதம் சுரேஸ் என்பவர் நீண்ட பயணம் செய்து முடிவில் முன்பின் தெரியாத ஒரு நாட்டை அடைந்தார். அரசியல் குழப்பமும் பொருளாதாரக் கஸ்டமும் மக்களை எவ்வாறு பிறந்த நாட்டை விட்டு வெளியேற்றுகின்றன என்ற உண்மையை இவருடைய கதை விளக்குகின்றது. மேலும் பிரயாணம் மேற் கொண்டபோது எத்தனித்த இடமும் எதிர்பாராத வகையில் மாறலாம் என்பதனையும் இது காட்டுகின்றது.

மாசி மாதக்குளிர்- காலை நேரம் வார்சோவுக்கு அண்மையில் உள்ள டெபாக் நகரில் உள்ள அகதிகள் வரவேற்பு நிலையம் வெறிச்சோடிக்கிடந்தது. முதல் நாளன்று பெருந்தொகையான சோமாலியர்கள்தென் போலந்துக்கு மாற்றப்பட்ட காரணத்தால் இங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் கூட்டம் அதிகமாக இல்லை. இச்சிற்றுண்டிச் சாலையில் தான் ராசரதம் சிகரெட் பியர் இனிப்புப்பண்டம் எனபனவற்றை விற்பனை செய்பவராக தொழில் புரிகின்றார். சாவகாசமாக இருவரும் உட்கார்ந்து உரையாடினோம்.

சென்ற இலையுதிர் காலத்தில் 31 வயது நிரம்பிய இவர் முன்பின் தெரியாத இந்த நாட்டில் கால் வைத்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் பொறியியலாளராக பட்டம் பெற்ற இவர் யாழ்ப்பாணத்தில் வசதியான நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராவர். இவருடைய மனைவி கலைவாணி ஒரு பரதநாட்டிய ஆசிரியை ஆவார். ஆடம்பரமற்ற அமைதியான சந்தோஷமான குடும்ப வாழ்க்கையை தாம் விரும்புவதாக கூறிய இவர் அரசியலில் ஈடுபாடு கொண்ட தந்தையார் கூற்றை நினைவுபடுத்தினார். "தமிழன் என்றால் எல்லாம் லேசாகக் கிடைத்துவிடாது எனவே கஷ்டப்பட்டு படித்து நல்ல வேலையை தேடிக்கொள்" -ஆனால் இந்தப் புத்திமதி முழுமையாக நிறைவேறவில்லை.

நாட்டின் பிரச்சனை ஆரம்பமான காலத்தில் தான் நான் எனது முதல் வேலையை தேடத் தொடங்கினேன். தமிழன் என்றவுடன் விடுதலைப் புலிகள் அங்கத்தவராக இருப்பாரோ என்ற ஐயத்தின் பேரில் நான் உட்பட பல இளைஞர்கள் தொழில் இழக்கும் நிலை தோன்றியது எனநினைவுபடுத்தி கூறினார்.

கடைசியாக அநேக இளைஞர்கள் போன்று இவரும் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தொழில் பெற்றார்.



படிப்பகம்

padippakam

ஆனால் யாழ்ப்பாணத்து நிலை காரணமாக குடும்ப அக்கறை உந்தியதால் நாட்டுக்குத் திரும்பினார். அவருடைய வீடு குண்டு வீச்சுக்கு இலக்காகியது. 1991 ஆம் ஆண்டில் சமையல்கட்டில் மனைவி கலைவாணி இருந்தபடியால் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

"இச்சம்பவத்திற்கு முன்பும் பிரச்சனைகள் இருந்தன எனினும் எமது வீட்டில் இருக்கக்கூடியதாக இருந்தது. வீட்டுடன் எல்லாமே அழிந்து போனதும் அகதி என்ற உணர்வு தோன்றியது" என்று கூறினார். "இச்சம்பவத்திற்கு பின் பாதுகாப்புத் தேடி பல இடங்கள் மாறி மாறி தங்க நிர்ப்பந்தம் ஏற்பட்டது" எனவும் சொன்னார்.

கொழும்பில் 1994 ஆனிமாதம் வழமையான தேடுதல் நடவடிக்கையின் போது ராசரதம் இரண்டு வாரங்கள் தடுத்துவைக்கப்பட்டார். 1000 டொலருக்கு சமமான பணத்தைக் கொடுத்து மீட்கப்பட்டார். மீண்டும் 1995 ஆவணிமாதம் இதேபோன்ற சூழிநிலையில் தமிழ் இளைஞர் என்ற காரணத்தால் தடுத்து வைக்கப்பட்டார். தமிழ் இளைஞர் என்பதால் அரசாங்கம் ஐயக் கண்ணுடன் பார்த்தது. அதே சமயம் விடுதலைப் புலிகள் தனது படைக்கு இளைஞர்களைக் திரட்டியது. நான் இரு சாராருடனும் இணைய விரும்பவில்லை என்றார் இவர்.

குண்டுவீச்சு எறிகணை வீச்சு ஆகியவற்றின் பெரும் சத்தங்களினால் இவரின் குழந்தைக்கு செவிப்புலன் பிரச்சினை ஏற்பட்டது. இதன் காரணமாக எப்படியாவது இலங்கையைவிட்டு வெளியேறவேண்டுமென்று முடிவு செய்யவேண்டி இருந்தது. இவருடைய சகோதரர் சுவிஸ்நாட்டில் தொழில் புரிந்து சேமித்த தொகை முழுவதையும் பிரயாண முகவர் என்று தன்னை அறிமுகப் படுத்திய பேர்வழியிடம் கொடுத்தார்.

பிரயாண ஒழுங்குகள் துரிதமாக நடைபெற்றன. புத்தம்புது கடவுச் சீட்டுடனும் ரிக்கற்றுடனும் விமான நிலையம் சென்றதை ஞாபகப்படுத்திக் கொண்டார். ஒன்றும் பயப்படத் தேவையில்லை என முகவர் கூறி வழி அனுப்பினார். "2000 டொலர் பணம் என்னை சூரிச் நகரில் கொண்டு போய்விடும் என்ற நம்பிக்கையில் இருந்தேன்." என்றார் ராசரதம். ஆனால் நான் இறங்கிய விமான நிலையத்தில் மொஸ்கோ என்றிருந்தது. ஆச்சரியமாக இருந்தது கொச்சை ஆங்கிலம் தெரிந்த ரஷ்ய நாட்டவர் ஒருவர் இவரிடம் வந்து முகவருக்கு கொடுக்க வேண்டிய மிகுதித் தொகையையும் வசூல் செய்தார். பின்னர் கிராமப்புறத்தில் ஒரு புறம்போக்கான வீட்டில் ஐந்து நாட்கள் வரை தங்கவைக்கப்பட்டார். இதற்குப் பின் 36 மணி நேரம் காரில் பிரயாணம் செய்து மீண்டும் ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டார். இங்கு இந்தியா இலங்கையர் பங்களாதேசத்தவர்கள் ஆகியோர் நிறைந்து காணப்பட்ட நிலை. "தகரத்தில்அடைக்கப்பட்டதுபோல் தோன்றியது. தண்ணீரும் பிஸ்கட்டும் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட பிஸ்கட் பக்கெட்டில் போலந்தில் செய்யப்பட்டது என ஒட்டப்பட்டிருந்த சீட்டு நாம் எந்த நாட்டில் இருக்கின்றோம் என்பதை உணர்த்தியது" என இவர் மேலும் சொன்னார்.

பின்னர் இவர்கள் போலந்து நாட்டு காவல்துறையினரால் டெபாக் நகரில் உள்ள அகதிகள் வரவேற்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மூன்று மாதகாலம் உண்பதும் உறங்குவதுமாக கழிந்தது. இந்த நிலையத்தில் சமூகசேவை அதிகாரியாக கடமையாற்றிய திருமதி ஆனியா என்பவர் இங்குள்ள சிற்றூண்டிச் சாலையை நடாத்துமாறு பொறுப்புக் கொடுத்தார். "இங்கு மாதம் 70 டொலர் கிடைக்கும். வருமானம் மட்டுமல்லாது பொழுதும் போகும். சோம்பித்திரியத் தேவையில்லை" என்றார். பின்னர் இவருடைய மனைவியும் மகளும் இவருடன் இணைந்து கொண்டபடியால் ஓரளவு நிம்மதியான வாழ்க்கை அமைந்தது. "இங்கு குண்டு வீச்சு சத்தம் யந்திரத் துப்பாக்கி வேட்டுச் சத்தம் இன்றி வாழ்கின்றோம்" என்று கூறினார்.

தாய்நாட்டுக்கு மீளவும் செல்வீர்களா என்று வினாவியபோது "சிறிலங்கா தான் எனது தாய் நாடு எப்போதோ ஒருநாள் அங்குசெல்வேன். எங்களுக்கு சொந்தமான 50 ஏக்கர் நிலம் உண்டு . ஆனால் போர்ப்பிரதேசத்துக்குள் அடங்குகின்றது." என விடை அளித்தார். இந்த உரையாடலின் போது அவருடைய நண்பர் ஒருவர் அங்கு வந்தார். "இவர் பெரிய பணக்காரன். பரம்பரைச் சொத்து ஏராளம். எமது நாடு சமாதானம் நிலவும் நாடாக இருக்குமானால் அங்கு பொருளாதாரப் பிரச்சனை ஏதும் இருக்கும் என நினைக்கிறீர்களா?" என வினா எழுப்பினார்.

தனது எதிர்காலம் பற்றி ராசரதம் நிறையக் கூறினார். ஒரு போலந்து நாட்டவர் இவருக்கு தொழில் வழங்க முன்வந்தாராம். திருமதி ஆனியா அறிவுரை கூறினாராம். இவருடைய சான்றிதழை போலந்து நாட்டில் ஏற்கக் கூடியதான நடவடிக்கை எடுக்கலாம். இந்த நாட்டில் பல இலங்கையர் குடியேறுவதால் தனது மனைவி நடனவகுப்புக்களை நடத்தலாம் எனவும் கூறினார். இலங்கையிலோ அல்லது போலந்திலோ எந்த நாட்டில் வாழ்ந்தாலும் எதிர்காலத்தில் மிக்க நம்பிக்கையுடையவர் ராசரதம்.



படிப்பகம்

padippakam

# Tamil Refugee International Network

## தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பு

### அகதி அந்தஸ்து கோரும் தமிழர்களுக்கு பாதுகாப்பு



## கருத்தரங்கு அறிக்கை
## 1-3 ஆவணி 1997
## Herning, Denmark



படிப்பகம்

padippakam

# பின்னணித் தகவல்கள்

1983ம் ஆண்டு ஆடி மாதம் தமிழருக்கெதிராகத் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்ட கொலை கொள்ளையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக அன்றிலிருந்து இன்றுவரை, சிறிலங்காவில் இருந்து பெருந்தொகையான தமிழ் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் நீடித்தயுத்தம் ஒன்று நடப்பதாக மக்களின் வெளியேற்றம் காட்டுகின்றது.. பொதுவாக உள்நாட்டு யுத்த விஸ்தரிப்பின்போது, தொடர்ந்து புகலிடம் தேடும் தமிழர்கள் குறிப்பிட்ட மேற்கத்திய நாடுகளை வந்தடைகிறார்கள். அந்த நாடுகள், சித்திரவதை, இனத்துவேஷம் யுத்தம் முதலியவற்றிலிருந்து தப்பி ஓடிவருபவர்களை மனிதாபமானமுறைப்படி குடியேற உதவுகின்றார்கள். 1983ம் ஆண்டு ஆடிக் கலவரத்தின் பின் இந்த நாடுகள் தஞ்சம்புகுந்த தமிழர்களை வரவேற்று தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தார்கள். அன்றியும் தமிழ் அகதிகளும் மற்றும் பெருந் தொகையானவர்கள் வேறுநாடுகளில் இருந்து வரு வதையிட்டு தஞ்சம்புகுவதற்கும் குடியேறுவதற்குமாக இருந்த சட்ட அமைப்பைக் கட்டுப் படுத்தியும் தங்கள் கொள்கைகளையும் மாற்றிக் கொண்டார்கள். எதிர்பாராதவிதமாக உள்நாட்டு யுத்தத்தின் கெடுபிடிகள் தீவிரமாகியதனால் தமிழர்களின் நிலை மிக மோசமாக வுள்ளது. இந்த உள்நாட்டுயுத்தம் 60,000 பேர்களை பலிகொண்டுள்ளது. 1983ம் ஆண்டிலிருந்து பெருந் தொகையான மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். ஆயிரத்துக் கதிகமான ஆண்களும், பெண்களும் அரசபடையினாலும் தமிழ் விடுதலைப் போராளிகளினாலும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். ஆயிரத்துக்கு மேலான தமிழ் இளைஞர்கள் தேடிக்கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு காணாமல் போயுள்ளார்கள். அந்தச் சூழ்நிலையில் நம்பிக்கையிழந்ததின் காரணமாக அதிகமான தமிழர்கள் தங்கள் பாதுகாப்புக்காக தொடர்ந்தும் புகலிடத்தை தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் புகலிடம் பெறக்கூடிய நாடுகளுக்குச் சென்று, புகலிடம் தேடமுடியாமல் சட்டங்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துகின்ற படியால் இவர்கள் சட்டங்களை மீறாமல் புகலிடம் கோர முடியாதநிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களின் நம்பிக்கையிழந்த நிலைமைகளைக்கண்டு கொண்ட பலதரப்பட்ட மறைமுகமான முகவர்கள் இவர்களைச் சட்டவிரோதமான முறையில் பணம் பெற்றுக் கொண்டு மேற்கத்திய நாடுகளுக்கு கடத்துகிறார்கள்.

பல சட்டங்கள் புகலிடம் கோருவோரை பலவிதமாக தடுத்து நிறுத்தினாலும் புகலிடம் கோருவோரை சட்டவிரோதமாக கடத்துபவர்கள் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் கள்ளத்தனமான, இரகசியமான கடத்தல்களினால், புகலிடம் தேடுவோர் பல விதமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது பலர் உயிர் ஆபத்துக்களையும் சந்தித்துள்ளார்கள், சிலர் இறந்தும் உள்ளார்கள். இதற்கு பல எடுத்துக்காட்டுகளும் உண்டு. புகலிடம் தேடுபவர்கள் மாறும் இடங்களில் கைவிடப்பட்டும், தடுக்கப்பட்டும் உள்ளார்கள். பல பெண்கள் முகவர்களினால் பாலியல்வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையைவிட்டு முகவர்களின் உதவியோடு வெளியேறியோர்களில் சிலர் எங்கு இருக்கிறார்கள் என்று அவர்களுடைய குடும்பத்தாருக்கு பல மாதங்களாகத் தெரியாது. அகதிகளை கடத்துபவர் களைப்பற்றி பல அறிக்கைகள் உண்டு. அவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சட்டவிரோதமாக போதை பொருள் கடத்தல், கள்ளநோட்டு தயாரித்தல், போலி ஆவணங்கள் தயாரித்தல் போன்ற பல வகையான சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

அகதிகடத்தல் பற்றிய விபரங்கள் எப்படியேனும் பரவியிருந்தாலும் அவைகள் நிரூபிக்கப் படவில்லை. இந்த உண்மையை இக்கதையிலிருந்து பிரித்தெடுப்பதற்கு ஆதாரபூர்வமான விசாரணை ஒன்று தேவையாகவுள்ளது. மேற்கூறப்பட்ட மறைமுகமான வியாபார நோக்கையும், பயண இடையில் மாறுதல் நடைபெறும் பொழுது காணமல் போனவர்களின் விபரங்களையும், முகவர்களால் சட்டவிரோதச் செயல்களில் வற்புறுத்தி ஈடுபடுத்தப்பட்டவர்களின் தகவல்களையும் அல்லது மற்றவர்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை தெரிந்து கொள்வதற்குச் சரியான விபரங்களை பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாகவுள்ளது. மூடிமறைக்கப்பட்ட மர்மத்துக்கு ஏற்கனவே புகலிடம் தேடுபவர்களின் மனித உரிமைநிலைக்கும் ஒரு புதுப்பரிமாணம் கொடுக்கப்பட்டுள்ளது. சரியான விபரங்கள் இல்லாமையினாலும், அதைப்பகுத்தறிய முடியாமையினாலும், இப்பரிமாணத்தை விளங்கிக்கொள்ள எங்களுக்கு சிரமமாயிருக்கின்றது. இந்த பொறுப்பை கையாளுவதற்கு ஒரு ஸ்தாபனம் தேவையாயிருக்கின்றது. இருந்தும் அது எங்களுக்கு ஒரு அறைகூவல் போல தெரிகிறது. தொழில்ரீதியான அறிவும், தொடர்புகளும் தேவையாகவுள்ளது.



படிப்பகம்

padippakam

இந்த நிலையில் அதிகமான தமிழ் அகதிகள் வாழும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், மற்றய நாடுகளிலும் உள்ள சங்கங்கள் இந்த தேவையினை பூர்த்தி செய்யமுடியாத நிலையில் உள்ளது கவலைக்குரிய விடயமாகும். உறுதியான சாட்சியங்களுடனும், ஆதாரங்களுடனும் இக்கொடூரமான கதைகளை பொதுநோக்குடைய தனிப்பட்டவர்கள் உறுதிப் படுத்தியுள்ளார்கள். இப்பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல ஒரு நம்பிக்கையான அமைப்பு இல்லை. இப்படியான நிலையினுள் சிக்கியுள்ளவர்களுக்கு இப் பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கு பல விபரங்கள் தேவையாகவிருக்கின்றது. ஆனால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு தகுதியான நிலையம் இல்லை. இந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சில மாற்றங்களுடன் சர்வதேச தமிழ் அகதிகள் அமைப்பானது, தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. சர்வதேச தமிழ் அகதிகள் அமைப்பின் யாப்பானது இன்றைய தேவைகளையும், நோக்கங்களையும் பூர்த்தி செய்வதற்கு ஏற்றதாக அமைந்திருக்கவில்லை. இன்றைய நோக்கங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பின் யாப்பு அமையவேண்டியுள்ளது. இதனை மிக அவதானத்துடன் ஆராய்ந்து, விமர்சித்து அமைப்பதனால் தான் நட்டாற்றில் தத்தளிக்கும் தமிழ் அகதிகளுக்கு உதவ முடியும். இந்த தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்த இணைப்பானது புகலிடம் கோரும் தமிழ் அகதிகளுக்கு உயிர் ஆபத்தான நேரங்களில் உதவக்கூடியாக இருக்கும்.

இரக்கமில்லாத கடத்தல்காரர்கள் புகலிடம் கோரும் தமிழ் அகதிகளை கடலில் வீசுகிறார்கள். இப்படிப்பட்ட செய்திகளை சர்வதேச ஊடகத்தின் மூலம் சர்வதேச அரங்கின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பது இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாக ஆரம்பத்தித்தில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். மேற்குலக நாடுகளில் மத்தியில் உணர்வுகளையும், அனுதாபங்களையும் எழச் செய்ய பெரியளவிலான பிரச்சாரம் மிக மிக முக்கியமானது என்று கருதப்படுகின்றது.

பிரச்சாரம் ஒரு பலம்மிக்க ஆயுதம். கள்ளத்தனமான அகதிக்கடத்தலான தொழிலை பிரச்சாரம் மூலம் நிறுத்தவும் முடியும். இதனால் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பு ஏற்படும்.

# புகலிடம் தேடிய இலங்கைத் தமிழர் பற்றிய புள்ளி விபரத் தகவல்

1983 ஆடிமாத இனக்கலவரங்களுக்கு பின்னர் இலங்கைத்தமிழர் துன்புறுத்தலுக்குப் பயந்து தமது பிறந்த நாட்டைவிட்டு, புகலிடம்தேடி புறப்பட்டனர். வேறுபட்டநாடுகளினதும், ஐக்கியநாடுகள் சபை அகதிகள் சங்கத்தினதும் புள்ளிவிபர தகவல்களின்படி கிட்டத்தட்ட 30மூ இலங்கைத் தமிழர் 1983க்கு பின்னர் இலங்கைத்தீவினை விட்டு வெளியேறினர். உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 1.இந்தியா | |
| அகதிமுகாம்களில் | 56,000 |
| அகதிமுகாம்களில்(வெளியே உள்ளோர்) | 100,000 |
| புதிதாக வந்தவர்கள் | 8,000 (1996ஆம் ஆண்டிலிருந்து) |
| மொத்தம் | 164,000 |
| 2.கனடா | 125,000 |
| 3.அமெரிக்கா | 15,000 |
| 4.இங்கிலாந்து | 35,000 |
| 5.நெதர்லாந்து | 15,000 |
| 6.ஜேர்மனி | 60,000 |
| 7.பிரான்ஸ் | 40,000 |
| 8.சுவிற்ஸ்லாந்து | 36,000 |
| 9.அவுஸ்திரேலியா | 8,000 |
| 10.டென்மார்க் | 8,000 |
| 11.பெல்ஜியம் | 1,000 |
| 12.நியூசிலாந்து | 1,000 |



படிப்பகம்

padippakam

| | | |
|---|---|---|
| 14.ஒஸ்ரியா | 300 | |
| 15.பின்லாந்து | 200 | (நன்றி. TRC, London May 1997) |

மேற்குறிப்பிட்ட புள்ளிவிபரமானது தமக்குள் குழப்பமானது. ஆனால் இதுமட்டும் தெளிவானதும், நம்பிக்கைக்குரியதுமான கதையின் பகுதியாகும். ஆனால் குறைவாக தெரிந்த சிலநாடுகளில் ஆயிரக்கணக்கான தமிழர் பல்வேறுபட்ட துன்பத்திற்கும், பலாத்காரத்திற்கும், கொள்ளையடிப்பிற்கும், சித்திரவதைக்கும் ஆளாகியுள்ளனர். இவ்வித நிலமைகள் பெருமளவில் புள்ளிவிபரங்களை அதிகரிக்கின்றது. இத்தகவல்கள் தகுந்தவையாகவோ, உறுதிப்படுத்தப் பட்டவையாகவோ இல்லை. இதன் விளைவாக பல்வேறுபட்ட வதந்திகள் உள்ளன. இவ்வாறான குறைவாகத் தெரியப்பட்டநாடுகளில் உள்ள தமிழர்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு எம்மால் கொடுக்க முடியும். இவ்வெண்ணிக்கைகள் தமிழ் அகதிகள் பிரச்சினையின் முக்கியதன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வகதிகள் செயற்பாட்டின் இரகசியத்தன்மை காரணமாக சரிவர உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

| | |
|---|---|
| 1 ரூசியா | 5000 |
| 2. பொட்ஸ்வானா | 2000 |
| 3. கென்யா | 1200 |
| 4. இந்தோனேசியா | 3000 |
| 5. உக்ரேன் | 1000 |
| 6. தாய்லாந்து | 5000 |
| 7. வியட்னாம் | 1000 |
| 8. ரூமானியா | 750 |
| 9. மெக்சிக்கோ | 300 |
| 10. பேரூ | 300 |
| 11 சிலி | 200 |
| 12. புல்காரியா | 800 |
| 13. கம்போடியா | 500 |

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இவ்வகதிகளின் இடப்பெயர்வானது அடையாளம் காணப்பட்டிருப்பினும் புள்ளிவிபரம் சரியாக நாம் விரும்பியவாறு தரமுடியவில்லை.

இலங்கையின் தற்போதைய அரசு பதவிக்கு வந்த காலத்தில் இருந்து அரசானது சர்வதேச செய்தி ஊடகங்களை போர்ப்பிரதேசங்களுக்கு செல்வதை தடுத்தும், வெளியுலகத்திற்கு செய்திகள் தெரிவிக்கும் சர்வதேச முகவர்களை செயற்படாமல் செய்தும் இருட்டடிப்பு செய்ததில் அதிகஅளவு வெற்றியடைந்துள்ளது. இதன்விளைவாக இலங்கையின் நிகழ்வுகள், தொலைக்காட்சித் திரைகளிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது உலக செய்தித்தலைப்புகளில் இல்லாமலே போய்விட்டன.

பல வாதங்கள் இலங்கை அரசிற்கு எதிராக முன்வைக்கப்படினும் அரசானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசாகும். எனவே மக்கள் ஆதரவு அதற்குண்டு. மறுபக்கத்தில் தண்டனை என்னும் போர்வையில் மனிதஉரிமை மீறல்களும், ஜனநாயகத்திற்கெதிரான செயல்பாடுகளும் தற்போது இலஙகையில் நடைபெறுகின்றது. கடந்த இருவருடங்களில் பெரும்பான்மை சமூகமானது சிறுபான்மையரான பெருந்தோட்ட தமிழரின் பத்து இலட்சம் வாக்குரிமைகளை கவர்ந்து கொண்டதன் மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவாக்கப்பட்டுள்ளது. தற்போதைய பாராளுமன்ற ஜனநாயக நிலமையானது மட்டுப்படுத்தப்பட்டது.
வடமாகாண தமிழ் அங்கத்தினரை தெரிவு செய்கையில் வாக்களிக்கும் முறையில் வாக்காளர் பிரத்தியேகமான தமிழ் மக்கள் ஆகும். நான்கு இலட்சம் வாக்காளர்களை பிரதிநிதிப் படுத்தும் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர், சுமார் ஆயிரத்து ஐந்நூறு வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உண்மையில் ஒரு பாராளுமன்ற அங்கத்தினர் எட்டு வாக்கு களால் தெரிவு செய்யப்பட்டார். இதற்குக் காரணம் இப்பகுதியின் பொதுமக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அரசாங்கம் தனது சாதனையாகவும், கர்வமாகவும் கூறிக்கொள்வது என்னவெனில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் தலைநகரிலும் அதன் சூழலிலும் வாழ்கின்றனர். பெரும்பான்மையான தமிழர் தெற்கே இருப்பது வடக்கில் வாழமுடியாது என்பதாலேயாகும். அத்துடன் இவர்கள் அதிகம் கொழும்பில் இருப்பது



படிப்பகம்

padippakam

நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் நோக்குடனே. எமது உடனடியான நோக்கம், கருத்தானது இவர்கள் இலங்கையில் இருந்தாலோ அல்லது வேறுநாடுகளில் இருந்தாலோ அவர்கள் துன்புறுத்தலுக்கு பயமின்றி, உயிருக்குப் பயமின்றி பாதுகாப்பாக இருப்பதே.

இவ்விதமான சேவைகளை வழங்குவதில் மேற்குலகில் வசிக்கும் பல்வேறுபட்ட குழுவினர் பலமுறைகளில் முயன்றுள்ளனர். ஒவ்வொரு சங்கங்களும் தம்மால் இயன்ற செயற்பாடுகளை செய்ய முயன்றும் அருகில் இருக்கும் நாடுகளில் உள்ள சங்கங்களில் இருந்து மட்டுப் படுத்தப்பட்ட உதவிகள்தான் கிடைத்தன. கீழ்வரும் தகவல்கள் சில முயற்சிகளின் உதாரணமாகும்.

*1992* – நோர்வே, டெனிஸ் சங்கங்கள் கிரேக்கத்தில் மாட்டிக்கொண்ட தமிழ்அகதிகளுக்கு உதவியது. மொத்தம் *106* பேர்கள் வெளிக்கொணரப் பட்டனர்.

*1993* – ரூமேனியாவில் துன்பத்துக்குள்ளான *96* தமிழ்அகதிகளுக்கு டெனிஸ்சங்கங்கள் உதவியமை.

*1996* – கிரேக்கத்திற்கருகில் நடைபெற்ற கப்பல் விபத்தில் மரணத்திற்குள்ளான *92* தமிழர்கள் உட்பட *240* அகதிகள் பற்றிய அறிக்கை தொடர்பாக பல்வேறுபட்ட மேற்குலக சங்கங்கள் இணைந்து இதுபோன்ற சம்பவம் இனிமேலும் நிகழாமல் பாதுகாப்பதில் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

# கருத்தரங்கில் பங்கு பற்றியோர்

| | |
|---|---|
| 1. T. செல்வக்குமார் | டென்மார்க் |
| 2. மு. குணரட்ணம் | டென்மார்க் |
| 3. ஆ.லோகநாதன் | டென்மார்க் |
| 4. A.கதிர்காமநாதன் | டென்மார்க் |
| 5. N.முரளிதாஸ் | டென்மார்க் |
| 6. T.தேவபாலா | டென்மார்க் |
| 7. T.இரவீந்திரன் | நெதர்லாந்து |
| 8. N.சண்முகரட்ணம் | நோர்வே |
| 9. S.சச்சிதானந்தன் | நோர்வே |
| 10. A. அமிர்தலிங்கம் | நோர்வே |
| 11.S.S கணேசானந்தன் | ஐக்கிய இராச்சியம் |
| 12. மு. சிதம்பரநாதன் | ஐக்கிய இராச்சியம் |

## தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்து கொள்ள முடியாமல் போனவர்கள்.

| | |
|---|---|
| 1.M.S. ரயாகரன் | பிரான்ஸ் |



படிப்பகம்

padippakam

2.S. கணேசதாசன் ஐக்கிய அமெரிக்கா

3சுழம் அகதிகள் உரிமைக் கழகம் இந்தியா

## கூட்டக் காண்பாளர்

1. ஆ.ஏ. விஜயபாலன் பிரித்தானிய அகதிகள் உதவிச்சங்கம்

## விசேட பேச்சாளர்கள்

1. திரு. மு. சி. கந்தசாமி
தலைவர்–தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம்–கேர்ணிங்

2. Mr. Thorbj¯rn Lorentzen
தலைவர்–தமிழ் டெனிஸ் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பு, சோசலிச மக்கள் கட்சியின் சிறுபான்மை இனத்தவருக்கான தெரிவுக் குழு – டென்மார்க்

3. Mr.Troels Johansen
கேர்ணிங் நகரமன்ற உறுப்பினர்–சோஷலிச முற்போக்கு கட்சி

4. Ms.Louise Holk
தலைவர் அகதிக் கொள்கைப்பிரிவு – டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கம்

5. Mr. Jens Christian Seeberg
தலைவர் – தேசிய அகதி நண்பர்களுக்கான சங்கம்

## நிகழ்ச்சிநிரல்

### 01.08.97

09.00 பதிவு செய்தல் – தேநீர்
09.30 வரவேற்புரை – திரு. மு. சி. கந்தசாமி
09.45 நல்வாய்ப்புரை – திரு.Thorbj¯rn Lorentzen
10.30 தேநீர் இடைவேளை
11.00 சங்கத்தின் நோக்கங்கள், தேவைகள்– விவாதம்
12.30 மதியபோசன இடைவேளை
14.00 எதிர் காலத்திட்டங்கள்
14.30 அகதிகளின் நிலைமை பிரான்ஸ்
கனடா
டென்மார்க்
16.00 தேநீர் இடைவேளை
17.30 அகதிகளின் நிலைமை நெதர்லாந்து
ஐக்கிய இராச்சியம்
ஜேர்மனி
19.00 இராப் போசனம்


படிப்பகம்

padippakam

## 02.08.97

09.00 தேநீர்
09.30 சென்ற தினக் கருத்தரங்கு அறிக்கை
10.00 ஐரோப்பாவில் பிரச்சாரம்–திரு.Troels Johansen
11.00 தேநீர் இடைவேளை
11.15 அகதிகளின் நிலைமை நோர்வே,சுவீடன்
12.00 ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளர் செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள்.
13.00 மதியபோசன இடைவேளை
14.00 எதிர் காலத்திட்டங்கள்
15.00 டென்மார்க்கில் அகதி அந்தஸ்து கோரும் தமிழர்களின் நிலை–திரு. Jens Christian Seeberg
16.00 புகலிடம் தேடிவருகின்ற பொழுது,காணாமல் போன தமிழர்களின், உறவினர்களின் அனுபவங்கள்.
17.00 எதிர் காலத்திட்டங்கள்
19.00 இராப் போசனம்

## 03.08.97

09.00 தேநீர்
09.30 சென்ற தினக் கருத்தரங்கு அறிக்கை
10.00 எதிர் காலத்திட்டங்கள்
10.30 தேநீர் இடைவேளை
11.00 சந்தேகங்களும், தீர்வுகளும் –Ms.Louise Holk
12.00 மதியபோசன இடைவேளை
13.00 கருத்தரங்கு நிறைவு.

## கருத்தரங்கு அறிக்கை

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உரிமைப்போரில் உயிரிழந்தவர்களைக் கௌரவிக்கும் முகமாக ஒரு நிமிடமௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது. திரு மு. சி. கந்தசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இக்கூட்டத்தை ஒழுங்கு செய்ய ஒத்துழைப்புத் தந்து உதவியவர்களுக்கு நன்றி கூறியதுடன் கூட்டம் வெற்றிகரமாக முடிவடைய வேண்டுமென நல்லாசிகளும் கூறினார்.

திரு.T.Lorentzen அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அரசியல் வாதிகள் பல உறுதிமொழிகளைக் கூறுவார்கள் ஆனால் அவைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகை களைத் தேடிக்கொள்வது இவ்வாறான சங்கங்களின் பிரதான கடமையாகும் என்று திரு. T.Lorentzen அவர்கள் கூறினார்கள். அவர் மேலும் பேசுகையில் இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற முழு உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார்.



படிப்பகம்

ITRN என்று அழைக்கப்படும் தற்போதைய நிறுவனத்தின் சட்டதிட்டங்கள் மாற்றியமைக்கும் விடயத்துடன் கூட்டத்தின்(பங்குபற்றியவர்களின்) செயற்பாடுகள் ஆரம்பமாகியது. சங்கத்தின் புதிய நோக்கங்களும் திட்டங்களும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சங்கம் TRIN என்று பெயர் மாற்றப்படவேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட நிர்ணயம் மறுகூட்டத்தில் நிலைநிறுத்தப்படும். இச்சங்கத்தின் தலைமைச் செயலகம் டென்மார்க்கில் இருக்க வேண்டும் என்றும், செயலாளர் டென்மார்க்கில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தலைவர்.– | S.S.கணேசானந்தன் | (ஐக்கிய இராச்சியம்) |
| உபதலைவர்.– | A.அமிர்தலிங்கம் | (நோர்வே) |
| செயலாளர்.– | T.செல்வக்குமார் | (டென்மார்க்) |
| உபசெயலாளர்.– | T.இரவீந்திரன் | (நெதர்லாந்து) |
| பொருளாளர்.– | மு.குணரட்னம் | (டென்மார்க்) |
| உபபொருளாளர்.– | | |
| நிர்வாகசபை உறுப்பினர்.– | | |

குறுகியகாலத் திட்டங்களும் அதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் ஆராயப்பட்டது. பிரான்சில் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் தற்போதைய நிலை என்ன என்று ஆராயப்பட்டது. இவர்களின் நிலமை இரண்டு வருடங்களாக மிக மோசமாக உள்ளது. இருப்பினும் பெருந்தொகையானோரைத் திருப்பி அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரியவருகின்றது.
அடுத்து கனடாவில் உள்ள நிலைபற்றி ஆராயப்பட்டது. அங்குள்ள இலங்கையர்களுக்கு ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்குள்ள பிரச்சனைகள் போல் பெரிதாக எதுவும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டது.
கொலண்டில் உள்ள நிலைபற்றி ஆராயப்பட்டது அங்கு ஒருசிலர் மட்டும்தான் தஞ்சம் கோரி வருகின்றனர் என்றும் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப் படுகிறார்கள் என்பது எமக்குத் தெரிந்த வகையில் உண்மை என்றும் அங்கிருந்து வந்த பிரதிநிதி குறிப்பிட்டார்.
இலண்டனில் உள்ள நிலைபற்றி உரையாடப்பட்டது. எவ்வளவு தடை விதித்தாலும் அரசியல் தஞ்சம் கோரி பலர் வருகின்றனர். சிலர் திருப்பி அனுப்பப்படுகின்றனர். ஆனாலும் இது முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை. அரசியல் தஞ்சம் கோரி மறுக்கப்பட்டவர்கள் அண்மைக் காலத்தில் திருப்பி அனுப்பப்படவில்லை என்றுதான் கூறமுடியும்.

டெனிஸ் அகதிகள் சங்கத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் அகதிகளுக்கும், அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்குமான சட்டதிட்டங்களும் சமூகசேவை நிலமையும் என்ற பத்திர வெளியீட்டில் தேவையான பல விபரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளைப்பற்றிய முக்கியமான நம்பத்தகுந்த விபரங்களை இந்த வெளியீட்டு நிரூபம் எமக்கு அறியத்தருகின்றது என்றும் உரையாடப்பட்டது.

அகதிகள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கும் நோக்கமாக அந்தந்த நாட்டிலுள்ள நம்பத்தகுந்த வட்டாரங்களைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அடுத்து டென்மார்க் நிலைபற்றி உரையாடப்பட்டது. அரசியல் தஞ்சம் மறுக்கப் பட்டவர்களை திருப்பி அனுப்புவதற்கு இங்குள்ள இலங்கைத் தூதுவராலயம் கடவுச்சீட்டுக்களை வழங்கி முன் ஏற்பாடான உதவியைச் செய்கின்றது என்பது அப்பட்டமான உண்மை என்றும் கருதப்பட்டது. இந்த திருப்பியனுப்பும் முயற்சியினால் பலர் தலைமறைவாகின்றனர் அல்லது வேறுநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

நோர்வேயில் உள்ள அகதிகளின் நிலைப்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டது. நோர்வே அரசாங்கம் விசேடமான, முரண்பாடான சட்டங்களை நிறைவேற்றி இலங்கையர்களுக்கு எந்தவிதமான நுழைவு அனுமதியும் அரசியல் தஞ்சமும் மறுக்கப் படுகின்றது. இது மாத்திரமன்றி கல்வி பெறுவதற்காக வரும் மாணவர்களுக்கும் இலங்கையிலுள்ள நோர்வே தூதுவராலயம் விசா கொடுக்க மறுத்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

padippakam

மொழிபெயர்ப்பாளர்களால் அகதிகளுக்கு பெரிய பிரச்சினை தோன்றுவதாக எல்லா நாட்டு பிரதிநிதிகளும் கூறினார்கள். தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை மறுப்புத் தெரிவிக்கும் செயற்பாட்டைச் சுலபப்படுத்துவதற்காக விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் அதிகாரிகள் மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துகின்றுனர். மொழிபெயர்ப்பாளர்கள் புகலிடம் கோருபவர்களின் பகைவர்கள் போலச் செயற்பட்டு வேண்டுமென்றே வாக்குமூலங்களை பிழையானமுறையில் மொழி பெயர்க்கின்றனர். எனவே ஒரு பிரத்தியேகமான மொழிபெயர்ப்பாளர் ஒருவரை வாக்குமூலம் எடுக்கும் நேரத்தில் அனுமதிக்க வேண்டும் என்று எல்லா நாட்டு அதிகாரபீடங்களுக்கும் கடிதம் எழுதவேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது மொழிபெயர்ப்பு பிழையாக இருக்காத வண்ணம் அவர் கவனித்துக் கொண்டிருப்பார்.
முக்கியமான நாடுகளான ஜேர்மனி, சுவிட்சிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கு பற்றவில்லையென்று கவலை தெரிவிக்கப்பட்டது.
ஐரோப்பிய நாடுகள் அகதிகள் விடயத்தில் அக்கறை காட்டுவது குறைந்து வருவது மிகத்தெளிவாகப் புலன்படுகின்றது. ஐரோப்பியநாடுகளில் நிரந்தர வசிப்புரிமை பெற்ற இலங்கையர்கள்கூட லண்டனை நோக்கிவரும் ஒரு மனப்போக்குள்ளவர்களாக இருக்கின்றனர். தமது பிள்ளைகள் ஆங்கில மொழியில் தமது கல்வியைப் பயில முடியும் என்பதும் அவர்களுடைய தேர்வுக்கு ஒரு காரணமாகும்.

சித்திரவதையினால் மனநிலையும், உடல்நிலையும் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல் சாதாரணமாக தஞ்சம் கோருபவர்களும்கூட தமது பிரச்சினைகளைத் தெட்டத் தெளிவாக விண்ணப்பத்தை பரிசீலனை செய்யும் அதிகாரிக்குச் சொல்ல வேண்டும். இதைத் தொடர்ந்து மனோதத்துவ நிபுணர் கதிர்காமநாதன் உரைநிகழ்த்தினார். அவர் தனது கல்விரீதியான சில குறிப்புகளைக் குறிப்பிட்டார். அவருடைய அந்த விளக்கவுரை கீழே உள்ளது.

## தமிழ் அகதிகளின் குறிப்பிடத்தக்க ஒருநிலை

ஒருவர் பிரச்சினையற்ற சாதாரண மனிதனாக இருக்கும்பொழுது மனநிலையும், உடல்நிலையும் நல்ல நிலையில் இருக்கும் அந்த மனிதன் இயற்கை, மற்றையமனிதர்கள், சமூகம், சூழல், மறக்க முடியாத அசம்பாவிதமான சம்பவங்கள் ஆகியவற்றினால் பாதிக்கப் படுகின்றான். அப்படிப் பாதிக்கப்பட்டமனிதனுடைய ஜீவாதாரமான செயற்பாடுகள் பிற்போக்கான நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அதனால் மனிதவலு நிலை குன்றுகின்றது போராடிக் கொண்டிருக்கும் சமூகத்தின் அகதிகள் படும் துன்பங்களைப்பற்றி விளக்கிக் கூற முடியாமைக்கு நாம் மனம் வருந்துகிறோம். போராட்ட காலத்தில் அசாதாரண (காணக்கூடாத) சம்பவங்களை நேரில் கண்டும் அனுபவித்தும் கஸ்டப்படவேண்டிய எதிர் பாராத நிலைக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். உதாரணமாக பாரியகுண்டு வீச்சு பெரிய பொருட்சேதம், நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர் ஆகியோரின் உயிர் இழப்புகளை நேரில் காண்பது, இறந்த மனிதஉடலை மிருகங்கள் உண்பது போன்ற அசாதாரண சம்பவங்களை சாதாரண நிகழ்வுகளாக நேரில் காணும் நிலை தமிழ் அகதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.அதுபற்றி நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.
மேற்குறிப்பிட்ட மனஅதிர்ச்சியின் அமுக்கங்கள் புத்தி ஜீவியாக வாழ்ந்த மனிதனுடைய மனநிலையையும் உடல்நிலையையும் பாதித்து அவனுடைய நாளாந்த சமூகவாழ்க்கை முறையை சாதாரண நிலையிலிருந்து அசாதாரணநிலைக்கு மாற்றுகின்றது. மனிதன் தன்னைப் பற்றிய பூரண உணர்வுகளையும் தனது சூழலைப் பற்றிய பூரண உணர்வுகளையும் அற்று ஒரு மரத்துப்போன நிலைக்கு மாற்றப்படுகிறான் அந்த உணர்வற்ற நிலையில் பலர் மதுவருந்த முற்படுகின்றனர். பலர் போதைவஸ்துக்களை பாவிக்கப்பழகிக் கொள்கின்றனர், மூடநம்பிக்கை யுள்ளவர்கள் மூடஅபிமானிகளின் கருத்துக்களை ஏற்றல், புரியாத, மாற்றமுடியாத உடல்நோய், மனநோய், தற்கொலை முயற்சி போன்ற வேண்டாத முயற்சிகளுக்கு மனிதன் ஏவப்படுகிறான்.
அகதிகளின் நிலையையும், அனுபவங்களைப் பற்றியும் வேறுநாடுகள் சரியாக அறியவில்லை என்றுதான் நாம் ஊகிக்க முடிகிறது. போரினால் மனிதனுடைய உடல், உள, சமூகநிலையில் பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றது என்று நாடுகடத்தும் சுகாதார, சட்ட, சமூகஅதிகாரிகள் அறியவில்லை என்று நாம் கருதமுடிகிறது.
தமது நாட்டுப் பிரச்சினை விடயத்தில் தமிழர்களைப் பொறுத்தவரையில் செய்திகளைச் சேகரிப்பதில், செய்திகளை மற்றவர்களுக்குப் பரவச் செய்வதில், வேறுவிடயங்களை முன்னின்று ஆரம்பிப்பதில் அவ்வளவு அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. இக்கருத்தும் வுசுஜனே் வேலைத்திட்டத்தில் ஒரு முக்கிய விடயமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
இப்படியான செய்தி சேகரிப்பு முயற்சிகளும் TRIN வேலைத்திட்டங்களும் நோக்கங்களும் என்ற சரத்துப்பட்டியலில் அடங்கும்.


படிப்பகம்

## Troels Johansen

தமிழர்கள் ஒன்று சேர்ந்து அரசியல்வாதிகளைத் தொடர்பு கொண்டு தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் விடாமுயற்சி எடுக்கவேண்டும் என்று மிக அழுத்தமாகக் கூறினார். இலங்கையில் நடக்கும் அசம்பாவிதமான சம்பவங்கள் பற்றிய செய்திகளைச் சேகரித்து சரியான, உண்மையான புதினங்களை மேற்கத்திய செய்திப்பரப்பு நிலையங்கள் மூலமாக பரப்பவேண்டியது தமிழர்களுடைய தலையாய கடமை என்று அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

## Jens Seeberg

டென்மார்க்கில் புகலிடம் கோருபவர்களுக்கான புதிய சட்டமாற்றத்தைப் பற்றியும் விளக்கிச் சொன்னார். புகலிடம் கோருவதற்கு அகதிகள் டென்மார்க்கிற்குள் வரமுடியாத வகையிலும் புகலிடம் கோருபவர்களுக்கு சுலபமானமுறையில் மறுப்புத் தெரிவிக்கும் வகையிலும் ஒரு புத்திசாலித்தனமான முறையில் இந்த புதிய சட்டமாற்றமுறை அமைந்துள்ளது.

இலங்கையில் நடக்கும் பிரச்சினை தொடர்பாக UNHCR வெளியிட்ட செய்தி அறிக்கை தேவையற்ற முறையில் மற்றைய மனித உரிமைக்காக உழைக்கும் நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கைக்கு முரண்பாடாக அமைந்துள்ளது. (உதாரணமாக Amnesty International, Human Rights Watch அதேவேளை அமெரிக்க அரசாங்கம் போன்றவைகள்) UNCHR ஒரு மனச்சார்பான இந்த அறிக்கையை கடுமையாக கண்டித்து கடிதம் ஒன்று அனுப்புவதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

இலங்கைத்தமிழர்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குப் போவதற்கு வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவர்களைத் தொடர்பு கொண்டு பல கஸ்டங்களில் சிக்கி அவலப்படும் நிலைபற்றி அக்கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, அதுபற்றி ஆராயப் பட்டது. இப்படியான கஸ்டங்களில் சிக்கிக் கொண்டவர்களின் அவல நிலைபற்றி சரியான விபரங்களை அறிவதற்காக அவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றும் அக்கூட்டத்தில் முக்கிய அம்சங்களில் ஒன்றாக அமைந்தது. தமிழர்கள் வெளிநாட்டு முகவர்களிடம் சிக்கி அவலநிலைக்கு ஆளாகாமல் தவிர்த்துக் கொள்வதற்கு இச்சங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவுமுகமாக, பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டவர்களின் உறவினர்கள் அன்றைய கூட்டத்தில் கலந்து தமது கசப்பான அனுபவங்களைப் பற்றி விளக்கிக் கூறினார்கள்.
தமது உள்ளூர் கிளைகளுக்கும், தலைமைக் காரியாலயத்திற்குமான நிதி சேகரிப்பு முயற்சிகள் எல்லா நாடுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதிசேகரிப்பு, செய்திசேகரிப்பு பொறுப்பு என்பன எல்லா நாடுகளுக்கும் உண்டு

## Ms. Louise Holk அவர்கள்.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் பற்றி டனிஸ் அகதிகள் சங்கம் வெளியிட்ட உண்மைநிலை அறிதல் என்ற வெளியீட்டு அறிக்கையில் எந்தவகையிலும் வரையறையான முடிவும் இல்லை என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார். அந்த வெளியீட்டுக்குப் பொறுப்பான அதிகார பீடங்களின் செயற்பாடுகளும், தீர்மானங்களும் இப்படியான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது என்று வெளியீட்டு எழுத்தாளர்கள் கருதுவதாகவும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார். ஐரோப்பிய நாடுகளில் உள்ள அகதிகள் சங்கங்கள் பெரும்பாலும் அகதிகளின் மேம்பாட்டுக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தாலுங்கூட செய்திகளை பரிமாறிக் கொள்ளும் விடயத்தில் சரியான பூரணத்துவம் அடையவில்லை என்று அவர் பேசுகையில் சுட்டிக் காட்டினார். தமிழ் அகதிகள் ஒரு முன்னேற்றமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு தான் இப்படியான கூட்டங்களில் பங்குபற்றி தன்னால் இயன்ற பெரும் உதவிகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார்.
அழைப்பை ஏற்று விருந்தினர்களாக வந்து கூட்டத்தில் பேசுகையில் கூட்டத்தில் பங்கு பற்றிய யாவரும் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பேச்சு மிகத் தெளிவாகவும் பல பயனுடைய அறிவுறுத்தல்களைத் தரக்கூடியதாகவும் இருந்தது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை அவதானிக்கையில் ஆண்கள் மட்டும்தான் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்றும் ஒரேயொரு பெண்மணி விருந்தினராக கலந்து கொண்டார் என்றும் அந்தமுறை எதிர்காலத்தில் மாற்றமடைய வேண்டுமென்றும், தீர்மானம் எடுக்கப்பட்டது.

## TRIN அங்கத்தவர்கள் ( பிரமுகர்கள்) தொடர்பான தீர்மானம்

ஒரு ஐரோப்பிய நாட்டிலிருந்து மூன்று அங்கத்தவர்கள் மட்டும்தான் ஆகக்கூடுதலான தொகையாக இருக்க வேண்டும். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஒரு அங்கத்தவர் அங்கத்துவம் பெறலாம்.

padippakam

செயலாளரும், திறைசேரிக்குப் பொறுப்பானவரும் தலைமைக் காரியாலயம் அமைந்திருக்கும் நாட்டில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். தற்பொழுது டென்மார்க்கில் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளது. பிரத்தியேகமாக இரண்டு பிரமுகர்கள் வேண்டப்படுகின்றனர். அவர்களுடைய சேவைகள் சங்கத்தின் நாளாந்த செயற்பாடுகளுக்குத் தேவைப்படுகின்றன.

01-08-1997ல் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களின் (அங்கத்தவர்களின் ) பட்டியல் பின்வருமாறு-.

| | | |
|---|---|---|
| டென்மார்க் | 3 | (அத்துடன் 2 துணைப்பிரமுகர்கள்) |
| நோர்வே | 3 | |
| ஹொலண்ட் | 3 | |
| பிரான்ஸ் | 3 | |
| பெல்ஜியம் | 3 | |
| ஜேர்மன் | 3 | |
| சுவிட்சர்லாந்து | 3 | |
| இங்கிலாந்து | 3 | |
| மொத்தம் | 26 | |

மற்றைய நாட்டு அங்கத்தவர்கள் பின்வருமாறு.-
(இத்தாலி, கிரேக்கநாடு போன்றவைகள் இன்னும் தீர்மானிக்கப் படவில்லை)

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | 1 |
| கனடா | 1 |
| அமெரிக்கா | 1 |
| இந்தியா | 1 |
| சுவீடன் | 1 |
| பின்லாந்து | 1 |
| மொத்தம் | 6 |

ஒவ்வொரு நாட்டிலும் புதினங்களைச் சேகரிப்பதற்காக மூன்று செய்திச் சேகரிப்பாளர் நியமிக்கப்பட்டு உண்மையான செய்திகள் என்று நிச்சயப்படுத்திய பின்பு அந்தச் செய்திகளை தலைமைக் காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும். செய்தி அறிவிப்பு நடவடிக்கைகள் குறிப்பிட்ட ஒருவரால்தான் செயல்முறைப் படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் உபகாரியாலயங்கள் நிறுவப்பட்டு நிதிநிலைமையை மேம்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப் பட்டது.

## எதிர்காலத்திற்கான நீண்டகால நடவடிக்கைகள் ( நீண்டகாலத் திட்டங்கள்)

ஒவ்வொரு நாட்டிலும் அல்லது முக்கியமான நாடுகளில் கிளைஅலுவலகங்களை நிறுவி அந்த அலுவலகங்களின் ஊடாக செய்திகளைச் சேகரிப்பதற்கு TRIN நிறுவனம் பெருமுயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். மக்கள் பொய் வதந்திகளை உண்மை என்று நம்பி கிளை நிறுவனங்களுக்கு அறிவிக்கும் பட்சத்தில் அச்செய்திகளை மீளாய்வு செய்து உண்மைதானா என்று TRIN நிச்சயப் படுத்திய பின்புதான் பிரபல்யப் படுத்த வேண்டும், குறைந்த பட்சம் 20 கிளைச்செயலகங்கள் நிறுவப்படலாம் என்றும் மூன்று வருடங்களுக்கிடையில் பதினைந்து செயலகங்கள் பதினைந்து நாடுகளில் நிறுவப்பட்டு விடலாம் என்று எதிர்பார்ப்பதாக கூட்டத்தில் கூறப்பட்டது.

TRIN நிறுவனம் உலகப் பிரபல்யமடைந்த நிறுவனமாக வளர்ச்சியடைந்து தொலைபேசி, FAX, கொம்பியுட்டர் போன்ற செய்தியனுப்புச் சாதனங்கள் மூலமாக மக்கள் இந்த நிலையத்திற்கு செய்திகளை அனுப்பக்கூடிய வகையில் ஒழுங்குகளைச் செய்து தமிழ் மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்கு முரண்பாடாக இடம்பெறும் அசம்பாவிதங்கள் பற்றிய அறிவிப்பு நடவடிக்கைகளைச் சுலபப்படுத்தி மக்கள் சிரமமின்றி இந்த செய்திசேகரிப்பு நிலையத்திற்கு செய்திகளை

படிப்பகம்

அனுப்பக்கூடிய ஒரு இலகுமுறை செயற்படவேண்டும் என்று நிறுவனம் நம்புகிறது. அதேவேளை எந்தநாட்டிலிருந்தும் சரியான, தேவையான, உண்மையான செய்திகளையும் தமிழர்களின் உணர்வுகளைப் பற்றியும் அறியக்கூடிய ஒரு நம்பிக்கையுள்ள செய்தி அறிவிப்பு நிலையமாக அமையவேண்டும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது, அதாவது TRIN ஒரு நம்பிக்கையுள்ள செய்தியறிவிப்பு நிலையமாகவும் பிரசித்திபெற வேண்டும் என்றும் சங்க இயக்குனர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

செய்தி எங்கிருந்து பெறப்பட்டாலும் சரியானமுறையில் அல்லது செய்திகள் பற்றி மீளாய்வு செய்யாமல் செய்திகளை வெளியிடக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் ஆக்கபூர்வமான வேலைகளும், விடாமுயற்சியும் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக அமைந்து ஒரு சுடர்விளக்காக ஒளிவிட வேண்டும் என்ற நம்பிக்கையும் சங்கத்தின் ஒரு முக்கிய குறிக்கோளாகும். இச்சங்கம் தனது சேவைகளை, கடமைகளைத் திருப்திகரமாக மேம்படுத்திச்செய்து செழித்து வளரவேண்டும் என்று நம்பப்படுகின்றது. சேவைகளை விஸ்தீரணம் செய்யும் பட்சத்தில் TRINமேற்றைய நாட்டு மக்களின் நேசத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும் வண்ணம் அவர்களுக்கும் தமிழர்களுக்குச் செய்யும் சேவைகளைப்போல செய்ய வேண்டும் என்று கருதுகிறது. வாழ்க்கை நலம்பெறத் தேவைப்படும் மனோதத்துவ ஆராய்ச்சிக்கும் மற்றைய விடயங்களுக்கும் தம்மால் இயன்ற முயற்சிகளை எடுத்து ஆராய்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட வாழ்க்கைநல்மேம்பாட்டு வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற முழுஉதவிகளையும் (நிதி, ஆள்) செய்வதாகவும் உறுதி மொழி அளிக்கப்பட்டது.

குறுங்கால நீண்டகால திட்டங்களின் வளர்ச்சிக்கு தகுந்தமுறையில் செயல்படுதலும் தகுந்தமுறையில் ஒழுங்குகளை நிறுவதலும்தான் ஒரு நம்பிக்கையான பாத்திரமாக அமையும். மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமாயின் எந்த வகையிலும் அரசியல் சார்பற்ற ஒரு சங்கமாக இருக்கவேண்டியது ஒரு பெரிய கட்டளையாகும்.

TRIN உலகில் உள்ள மற்றையநாடுகளில் கவனம் செலுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்ற விடாமுயற்சி எடுக்கத் தன்னை தயார்படுத்துகின்றது.

# எதிர்காலத்திட்டங்கள்

## குறுகியகாலம்

1. நிதி அல்லது வேறுவகையில் ஆதரவளித்த எல்லா முகவர்களுக்கும் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்புவது.

2. ஒன்றியங்களின் கூட்டங்களில் உதவியவர்களுக்கு நன்றிக்கடிதம் அனுப்புவது.

3. உரையாற்றியவர்களுக்கு நன்றிக்கடிதம் அனுப்புவது.

4. மகாநாடு முடிவுற்று மூன்று கிழமைக்குள், பிரதிநிதிகள் தங்கள் நாட்டு நிலைமைகள் சம்பந்தமாக தமது அறிக்கைகளை செயலகத்திற்கு அனுப்பி வைத்தல்.

5. வரையப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பிரதிநிதிகளிடையே விநியோகித்தல்.
6. நோர்வே பிரதிநிதிகள் ஒஸ்லோவில் கூடவிருக்கும் அடுத்த மகாநாட்டிற்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தல்.
7. கிடைக்கும் வசதிகளைக் கொண்டு ஓர் செயலகத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. நிதி சேகரிப்பதற்குத் தேவையான துண்டுப்பிரசுரங்கள் தயார்படுத்தல்.

9. அகதிகள் மனோரீதியில் தொடர்பான ஆய்வுத்திட்டத்திற்காக ஆரம்ப வேலைகள் ஆரம்பித்தல்.

padippakam

10. வேறுபட்டநாடுகளில் உள்ள அமைப்புகளுடனும், தனி நபர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தல்.

11. மனிதவள நிதி உதவிவசதிகளை ஆராய்தல்.

**இடைக்காலம்**

1. நோர்வேயில் நடைபெறவிருக்கும் மகாநாட்டிற்கு ஆயத்தமாதல்.

2. உரையாற்றுவோர், பிரதிநிதிகள் பட்டியலை விரைவில் நிலைப்படுத்திக் கொள்ளல்.

3. தகவல்நிலையத்தை ஆரம்பிப்பதற்கு தேவைக்குரிய தகவல்களைப் பெறுவதற்கு வேண்டிய வேலைகள் ஆரம்பித்தல்.

4. தபால் தொடர்புகளுக்காக ஓர் தரவினை பெறுவதற்கான வேலைகள் ஆரம்பித்தல்.

5. செய்திக்கடிதம் வெளியிடுவதற்கான சாத்தியக்கூற்றினை ஆராய்தல்.

6. டென்மார்க்கில் ஓர் செயலகத்தை அமைப்பதற்கான நிதியினை கண்டறிதல்

7. கிரேக்கத்திற்கு அருகில் டிசம்பர் 96ல் நடைபெற்ற கப்பல் விபத்து தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

8. எதிர்காலத் திட்டங்கள் நடவடிக்கைகள் தொடர்பாக ஓர் அறிக்கை தயாரித்தல்.

9. நிதி உதவி அமைப்புகளிடம் உதவி கோருவதற்கான விண்ணப்பங்களைத் தயார்படுத்தல்.

## ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளருக்கு, தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பினால் 01.10.97ல் அனுப்பப்பட்ட கடிதம்.

**Ms. Sadako Ogata**
**United Nation High Commissioner for Refugees**
**Geneva**
**Switzerland**

மதிப்புக்குரிய அம்மணி,

தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பினால் இவ்வாண்டு ஆவணி மாதம் 01,02,03 ஆகிய திகதிகளில் டென்மார்க்கில் உள்ள கேர்ணிங் நகரில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பல ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். தமிழ் அகதிகள், அகதி அந்தஸ்து கோரும் தமிழர்கள் எதிர் நோக்கும் இன்னல்கள், விஷேடமாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளரின் (UNHCR),Geneva,Colombo காரியாலயங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், செய்திகள் எவ்வாறு தமிழ் அகதிகளையும், அகதி அந்தஸ்து கோரும் தமிழர்களையும் பாதிக்கின்றது என்று ஆராயப்பட்டது. இப்படியான அறிக்கைகளின், செய்திகளின் அடிப்படையில் தான் ஐரோப்பிய அரசாங்கங்கள் அகதி அந்தஸ்து கோரும் இலங்கையரின் விண்ணப்பங்களை நிராகரிக்கின்றது என்று தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பின் கருத்தரங்கில் பங்கு பற்றிய பிரதிநிதிகள் பெருங்கவலை கொண்டுள்ளார்கள்.

கொழும்பு பகுதியும், மற்றும் இலங்கையின் தென்பகுதிகளும் தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய பகுதிகள் என தங்களின் செயலகங்களால் வெளியிடப்பட்ட செய்திகள் எல்லாம் தெரிவித்துள்ளன. கொழும்பில் தடுப்புக்காவலில் இருப்பவர்களை நடத்தும் முறை சரியானது என்றும், சித்திரவதை, மற்றைய தவறானமுறையில் நடந்துகொள்ளுதல் போன்றவை, பொலிசினாலும், பாதுகாப்புப்படையினாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என 9-9-96ல் தங்கள்


படிப்பகம்

padippakam

போன்றவை, பொலிசினாலும், பாதுகாப்புப்படையினாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என 9–9–96ல் தங்கள் செயலகத்தினால் வெளியிடப்பட்ட செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. இலங்கை அரசாங்கமானது மனித உரிமை மீறல்களை பல வழிகளில் தடுத்துநிறுத்துகின்றது, மனித உரிமைகள் தொடர்ச்சியாக வலிவுபடுத்தப்பட்டு வருவதாக தேசிய நிலையங்கள் தெரிவித்துள்ளன என்றும் 01–01–97 ல் தங்கள் செயலக செய்தி ஒன்று கூறுகின்றது.

இலங்கை அரசாங்கம் 1994ம் ஆண்டு பொதுத்தேர்தல் காலத்தில் முன்வைத்த பொறுப்புகளை கைவிட்டுள்ளது என்றும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் படிப்படியாக தரக்குறைவு அடைந்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது என்று சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல நிலையங்கள், அவதானித்துள்ளன.

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட, நடவடிக்கைகள் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த தவறிவிட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழுவானது இலங்கை அரசாங்கத்திற்கு சில முக்கியமான சட்ட மாற்றங்கள் தொடர்பாக, மாற்றங்கள் இடம் பெறவேண்டும் என்று ஆலோசனையை நடைமுறைப்படுத்த தவறியதாலும், ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவானது அடிப்படைத்தத்துவங்களையும், நடுநிலமையையும் கடைப்பிடிக்காமல் செயல்படுவதாலும் இலங்கை அரசாங்கமானது சர்வதேச கடமைப்பொறுப்புக்களைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டது. மனித உரிமை சிறப்புக் கடமைப் படையானது தடுப்புக்காவலில் உள்ளவர்களை பாதுகாக்கவில்லை என மனித உரிமைக்காக உழைக்கும் பல அமைப்புகள் தொடர்ந்தும் குறைகூறிவருகிறார்கள். புதிய மனித உரிமை ஆணைக்குழுவானது செயற்பட்டு ஒழுங்குகள் அற்ற நிலையில் அல்லது சட்ட உரிமைக்கட்டளைகளை மேற் கொள்வதற்கு உள்ளமைப்பு இல்லாத நிலையில் காணப்படும் போது மிகக் குறைந்தளவு பாதுகாப்பு வழங்கிய மனித உரிமை சிறப்புக்கடமைப் படையும் செயற்பட முடியாமல் செயலிழந்துள்ளது.

இலங்கை அரசாங்கமானது மக்களுக்கு உத்தரவாதமளித்த பல மாற்றங்களை நடை முறைப்படுத்த தவறிவிட்டது என்றும், இன்றைய அரசாங்கத்தின் செயல்முறைகளானது ஒருவர் சுதந்திரமாக கருத்து தெரிவிப்பதற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று யுசவளைடந 19 என்ற தணிக்கையிற்கு எதிரான சர்வதேச நிலையமானது கூறுகின்றது. இதற்கு மேலாக பல மனித உரிமைக்காக உழைக்கும் நிலையங்கள், பாதுகாப்பு படைகள் தண்டனையில் இருந்து விதிவிலக்கப்பட்டுள்ளது குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளன. அத்துடன் இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு மனித உரிமைமீறல்களுக்காக பாதுகாப்பு படையினர் எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். குறிப்பாக கைது செய்தலும் தடுப்புக்காவலில் வைப்பது தொடர்பாகவும் அதிகாரிகள், பாதுகாப்பு செயற்பொறுப்பாளர் உட்பட பாதுகாப்பு படையினர் அவசரகால விதிகளை மீறிநடந்துள்ளார்கள் என இலங்கை அதிஉயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. சட்டங்களை மீறுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற சட்டங்கள் இருப்பினும் ஒருவரும் தண்டிக்கப்படவில்லை. சித்திரவதை தொடர்ந்தும் நடைபெறுவதாக இலங்கை அதிஉயர் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் சித்திரவதை தொடர்பாக அல்லது கைதுசெய்யப்படுவோர் காணாமல் போவது தொடர்பாக பாதுகாப்புப்படையினர் பதிவுசெய்யப்படவில்லை.

இலங்கையில் நடந்துவரும் மனித உரிமைமீறல்களை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளர் திட்டமிட்டே மூடிமறைத்து வருவதாக மகாநாட்டுப் பிரதிநிதிகள் நம்புகிறார்கள். கொழும்பு உட்பட மற்றும் இலங்கையின் தென்பகுதிகளில் ஏற்றுக் கொள்ளமுடியாத அளவிற்கு தமிழர்கள் அடக்குமுறைக்கும், அட்டூழியங்களுக்கும் உள்ளாகிறார்கள் என்பதற்கு பல சாட்சியங்கள் உண்டு. அகதிகள் அட்டூழியத்தில் இருந்து வெளியேறுவதை தடுப்பதிலும் பார்க்க அகதிகளைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையாளர் முயலவேண்டும் என மகாநாட்டு பிரதிநிதிகள் தெளிவாக நம்புகிறார்கள்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை மிக அவதானமாக அறிந்து அதற்கு ஏற்ப தங்கள் செய்திகளையும், அறிக்கைகளையும் வெளியிடும் படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நன்றியுடன்

**து. செல்வக்குமார்**

**செயலாளர்**



படிப்பகம்

padippakam


# தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பு

**சர்வதேசமாக சிதறுண்டு வாழும் தமிழ் மக்களின் அவலங்களை வெளிக்கொணர உதவுங்கள்!**

**உங்கள் உறவினர், நண்பர்தெரிந்தவர்கள் பற்றிய விபரங்களை தெரிவியுங்கள்!**

**தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு எதிரான குரலுக்கு உரமிடுங்கள்!**

**தமிழ் அகதிகள் சர்வதேச இணைப்பின் முயற்சிகளுக்கு உதவுங்கள்!**

## தொடர்புகளுக்கும் விபரங்களுக்கும்

**T. Selvakumar**
**Secretariat**
**TRIN**
**Porsvaenget 7-2-5**
**7400 Herning**
**Denmark**
**Tel: +4597125593**
**Fax: + 4597125593**

**S.S. Ganeshanandan**
**14 Allom House**
**Clarenden Road**
**London W11 4JJ**
**United Kingdom**
**Tel: +44 1712290585**
**Fax:+44 1813736250**

I would like to support TRIN's work with Tamil asylum seekers world wide and I enclose a cheque/ International money order for..........................................................................

Full Name:..........................................................................................................

Address:..............................................................................................................

..........................................................................................................

Tel & Fax(If available)...........................................................................................

Please send to:
**T.Selvakumar, Secretariot, TRIN, Porsvaenget 7-2-5, 7400 Herning, Denmark.**




படிப்பகம்

padippakam

எமது சிறுகதை

# இக்கரைச் சீமை

-பொன்னரசன்-

மார்கழி மாதத்துக் காலைப் பனிக்காற்று சில்லென்று உடம்பை உறைய வைத்துக் கொண்டிருந்தது. மோகன் அவசரம் அவசரமாக அவனது வீட்டை விட்டுக் கிளம்பினான். காற்றுடன் பனிமழையும் சேர்ந்து கொண்டது. இருந்தாலும் அவனது நண்பன் வரன் உதவிய நீண்ட வின்ரர் ஜக்கெட் அக்குளிருக்கு ஈடுகொடுத்துக் கொண்டிருந்தது.

வீதியின் நடைபாதையில் இறங்கியதும் விடு விடு என பஸ்நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். நேரம் காலை மணி 5.30. அவன் வேலை செய்யும் சேர்விஸ் ஸ்ரேஷனுக்கு இன்னும் அரை மணியில் போய்ச் சேர வேண்டும்.

வரப்போகும் பஸ்சைப் பொறுத்ததே அவன் போய்ச் சேரும் நேரம். ஒருவாறாக பஸ்சும் வந்து சேர்ந்தது. பஸ்சுக்குள் ஏறும் போது தான் மோகனுக்குத் தன்னிடம் பஸ் கட்டணத்திற்குரிய சில்லறை இல்லை என்பது ஞாபகம் வந்தது.

தன்னிடம் இருந்த பத்து பவுண் நோட்டை எடுத்து பஸ்சாரதியிடம் நீட்டும் பொழுது சாரதி கூறிய ஆங்கில வார்த்தைகள் அவனுக்கு விளங்கியிருக்க நியாயமில்லை. ஆடாமல் அசையாமல் தான் கூறிய வார்த்தைக்கு எதுவுமே கூறாமல் நட்ட மரம்போல் நின்ற மோகனைக் கண்ட சாரதி ஒரு கையால் தன் தலையில் அடித்துக் கொண்டான். மோகனுக்கு அதுவும் விளங்கவில்லை. யாரோ புண்ணியவான் மோகனுக்குப் பின்னால் கியூவில் நின்றவர் மோகனுக்குரிய பஸ் கட்டணத்தை தானே செலுத்த முன்வந்தார். மோகன் தாங்யூ என்று சொன்ன வார்த்தைகளை அவர் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

மோகன் பஸ்சின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டான். அவனுக்கு சேர்விஸ் ஸ்ரேஷனில் நேற்று இரவு வேலை முடிந்து அலாரம் செற் பண்ணும் பொழுது ஏற்பட்ட அனுபவம் ஞாபகம் வந்தது. அலாரம் செற் பண்ணும் பொழுது ஏற்பட்ட கோளாறு காரணமாக அலாரம் ஏற்படுத்திய சத்தத்தில் அந்த நள்ளிரவு நேரத்தில் பொலிஸ் சயரன் சத்தத்துடன் வந்து சேர்ந்ததும் அவர்கள் கேட்ட குறுக்குக் கேள்விகளால் எங்கே நம்பர் இல்லாமல் தான் வேலை செய்வது வெளி வந்து விடுமோ என்று அஞ்சியதும் அப்படி எதுவும் நடக்காமல் தப்பியது ஆண்டவனின் கருணையே என்று எண்ணியதும் நினைவுக்கு வந்தன.

மோகன் இறங்க வேண்டிய சேர்விஸ் ஸ்ரேஷனும் வந்தது. பஸ்சை விட்டு இறங்கியதும் ஓடிச் சென்று சேர்விஸ் ஸ்ரேஷனின் கண்ணாடிக் கதவைத் திறந்தான். உடனடியாக நேரே சென்று ஆண்டவனை மனதில் துதித்து அலாரத்தை செற் பண்ணினான். அவன் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை.

அதைத் தொடர்ந்து சேர்விஸ் ஸ்ரேஷனின் உள் மின் விளக்குகள் போர்கோட் மின்விளக்குகள் எல்லாவற்றையும் போட்டான். காலைப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் அடுக்கி உரிய தட்டில் வைத்தான். அதன் பின் காசாளர் மேசையை ஒழுங்குபடுத்தி நாளாந்த வேலைகளை ஆரம்பித்தான்.

லண்டனுக்கு முதன் முதல் வருகை தரும் எம்மவர்கள் இக்கரைச் சீமையில் பாலும் தேனும் பெருகி ஓடுவதாக எண்ணியே வருகின்றனர். வேலை வாய்ப்புக்களைப் பொறுத்தவரை பேக்கரி மரக்கறிக்கடை நியூஸ் ஏஜென்ஸ் முதலியவற்றை விட்டால் எரிபொருள் நிரப்பு நிலையம் தான் தஞ்சம். மோகனும் இதற்கு விதி விலக்கானவன் அல்லன். இந்நாட்டிற்கு தஞ்சம் கோரி மனு நிராகரிக்கப்பட்டவர்களுள் அவனும் ஒருவன்.

வாகனங்கள் ஒவ்வொன்றாக எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்தன. போர்கோட் முழுவதும் வாகனங்களால் நிரம்பியிருந்தது. எரிபொருள் நிரப்பிய வாகன உரிமையாளர்கள் தங்கள் பில்களைச் செலுத்துவதற்காக கியூவில் வந்து கொண்டிருந்தனர். சேல்ஸ் சொப்பிலும் வாடிக்கையாளர்கள் கூடுதலாக இருந்தனர்.

எட்டாவது பம்பில் எரிபொருள் நிரப்பிக் கொண்டிருந்த வான் சாரதியின் செய்கைகள் மோகனுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தன. 30 பவுணுக்கு மேல் பெற்றோல் நிரப்பியாகி விட்டது. சாரதி அங்கும் இங்கும் பார்ப்பதும் பிரதான வீதியைப் பார்ப்பதுமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். திடீரென அவன் எரிபொருள் நிரப்புவதை நிறுத்தி பம்பை உரிய இடத்தில் வைத்து விட்டு சாரதி



படிப்பகம்

padippakam

ஆசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். கண்மூடி விழிக்கும் நேரத்தில் அந்த வான் பறந்து சென்றது.

மோகனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. வாகனத்தின் பதிவு இலக்கத்தைக் குறித்தாகி விட்டது. பயன். பொலிசுக்குத் தகவல் கொடுப்பதில் உள்ள சிரமம் அவனுக்குத்தான் தெரியும். சட்ட விரோதமாக வேலை செய்யும் அவனைப் போன்றவர்களால் செய்ய முடியாத ஒன்று. அதே சமயம் உரிமையாளருக்கும் அறிவிக்க முடியாது. அந்த வாரச் சம்பளத்தில் 35 பவுண் துண்டு. இதைப் போன்ற இழப்புகள் பலவற்றை மோகன் இதற்கு முன்பும் அடைந்துள்ளான். ஆனால் இது தான் முதல் தடவை இழந்த ஆகக் கூடிய இழப்பு.

மோகனைப் போன்ற வயதுடைய பலர் இந்நாட்டிற்கு வந்து சிறிது காலம் வேலை செய்து பின்னர் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து உதவிப்பணம் பெற்றுப்படித்துத் தங்கள் பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளனர். மோகன் அதற்கும் தகுதியில்லாதவன். உயர் படிப்பிற்குரிய மானியப் பணத்திற்கும் தற்காலிக அனுமதியில் உள்ளவர்கள் தகுதியற்றவர்கள்.

மோகன் சொந்த நாட்டில் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி கிடைத்தும் அங்குள்ள நிலைமைகளால் கல்வியைத் தொடர முடியாது இங்கு வந்தவன். இங்கும் அவனுக்கு அந்த உரிமை இல்லை.

நேரம் மதிய வேளையைத் தாண்டிக் கொண்டிருந்தது. போர்கோட் கொஞ்சம் அமைதியாக இருந்தது. அப்போது தான் மோகனுக்குக் கொழும்பில் இருக்கும் தனது தாயாரினதும் மூன்று தங்கைமாரினதும் நினைவு வந்தது. அவர்கள் கொழும்பில் தற்பொழுது இருக்கும் லொட்ஜூக்கு மாதாந்தம் கட்ட வேண்டிய பணத்தைப் பற்றி மூத்த தங்கை தொலைபேசியில் கூறியவற்றை நினைவு படுத்தினான்.

போர்கோட் அமைதியாக இருந்த அதே சமயம் சேல்ஸ் சொப் கொஞ்சம் பிஸியாக இருந்தது. அக்கம் பக்கத்திலுள்ள அலுவலகங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் உட்படப் பாடசாலை மாணவ மாணவியர்கள் பகல் போசன உணவிற்காக ஏதேனும் சோட் ஈற்ஸ்சுக்காக வந்து குவிந்தனர்.

மோகன் மிகவும் அவதானத்துடன் ரில் இல் நின்று கொண்டிருந்தான். கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டத்தைக் கிளியர் பண்ணினான். ஒரு கறுப்பு நிறத்தவன். வயது பதினெட்டு இருக்கலாம். அடிக்கடி அவனைப் பார்ப்பதும் சொப்பில் உள்ள சில பொருட்களை எடுத்துப் பார்ப்பதுமாக இருந்தான். அவன் எதுவுமே வாங்கியதாகத் தெரியவில்லை. இறுதியில் அவன் சொப்பை விட்டு வெளியே போகும் போது அவனது ஜாக்கட்டின் முன்பக்கம் சிறிது உப்பியிருந்தது போலத் தெரிந்தது. மோகன் ரில்லை விட்டு வெளியே வந்து சொப்பை ஒரு தடவை நோட்டம் விட்டான். மூன்று பெரிய மில்க்றே சொக்லெட் பெட்டிகளைக் காணவில்லை. அன்றைய மோகனின் காலை முழிவியளம் மோகனுக்கு நன்றாகப் படவில்லை.

மாலை மணி மூன்று ஆகியது. வழக்கமாக மூன்று மணிக்கு வந்து அவனை விடுவிக்கும் மற்றக் கஷியர் இன்னும் வரவில்லை. மோகனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வந்த நேரம் தொடக்கம் ஒரு கிறிப்ஸ் பைக்கற்றும் தேநீரும் தான் அவன் உணவாக இருந்தது. அடுத்த ஷிப்ட் காஷியர் வருவதற்குப் பதில் தொலைபேசி அழைப்புத்தான் வந்தது. இன்று அந்தக் காஷியருக்கு வேறு ஏதோ அவசர வேலை இருப்பதால் மோகனையே தொடரும்படி மனேஜர் கூறியிருந்தார். இப்படியான சந்தர்ப்பங்கள் மோகனுக்கு ஏற்கெனவேயும் ஏற்பட்டுள்ளன.

மோகனின் அன்றைய மதிய உணவு சான்விச் தான். ஒருவாறு பகற்பொழுது கழிந்து இரவும் வந்து சேர்ந்தது. நேரம் இரவு 9.30 .

மோகன் போர்கோட்டின் முகப்புப் பம்புகள் இரண்டையும் மூடி முன் கதவையும் பூட்டி நைட்சேவ் விளக்கின் சுவிட்சையும் போட்டு விட்டு வந்து அமரவும் முன் கதவில் ஒருவன் தட்டவும் சரியாக இருந்தது.

மோகன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எழுந்து சென்று கதவுக்குக் கிட்டச் சென்று அவனிடம் நைட் சேவ் கவுண்டருக்கு வரும்படி கூறிவிட்டு தனது இருக்கையில் வந்து அமர்ந்தான். ஆனால் அவனோ தனக்கு விரும்பிய கூல்ரிங்கை தானே எடுக்க வேண்டும் என்று அடம் பிடித்தான். மோகனின் சந்தேகம் வலுத்தது.

அவனைத் தொடர்ந்து இன்னும் இருவர் வெளிப்பட்டனர். மூவரும் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்தனர். ஒருவன் கறுப்பு இனத்தவன். மற்றைய இருவரும் வெள்ளையர்கள். மூவரும் நைட் கவுண்டருக்குக் கிட்ட வந்தனர். ஒருவன் முன் கண்ணாடியைப் பலமாக உதைத்தான்.



படிப்பகம்

இன்னொருத்தன் கைத்துப்பாக்கி ஒன்றை கவுண்டருக்குள்ளால் நீட்டி முன் கதவைத் திறந்து விடும்படி மோகனுக்குக் கட்டளை பிறப்பித்தான். மோகன் சற்று தாமதிக்கவே வெடிச்சத்தம் கேட்டது. ஆனால் ரவைகள் வெளிப்படவில்லை. மோகன் பயப்படவில்லை. அவன் திடீரென பொலிசை அழைக்கும் பனிக் பட்டனின் பொத்தானை அமுக்கினான். பொலிஸ் அவசர சேவைக்கும் போன் பண்ணினான். இதற்கிடையில் முன் கண்ணாடிக் கதவு உடைக்கப்பட்டு மூவரும் உள்ளே வந்தனர். ஒருவன் மோகனை மடக்கிப் பிடித்து அவனது தலையைச் சுவருடன் மோதினான். மோகன் கீழே விழுந்தான். அவனது தலையிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது.

தூரத்தில் பொலிஸ் வாகனங்களின் சயரன் சத்தம் கேட்கிறது. மோகன் மயங்கிக் கொண்டே போகிறான். பொலிஸ் வந்தும் அவனது உயிரை மீட்கப் போவதில்லை. அவனது உயிருக்கு நட்ட ஈடும் கிடைக்கப் போவதில்லை. இவனைப் போல் இன்னும் எத்தனை மோகன்கள்.

(யாவும் கற்பனை)


VINO CAKE MAKING

உங்களுக்குத் தேவையான சகல வைபவங்களுக்கும் விருப்பமான வடிவங்களில் கேக் செய்து தரப்படும்

தொடர்புகட்கு:

0181 908 1587

TOP OF THE CLASS TUITION

FOR

* GCSE * A LEVEL * BTEC * DEGREE

IN

* MATHEMATICS * STATISTICS

* CHEMISTRY

* EXCELLENT PASS RECORD * AFFORDABLE FEES

CALL:

0181 8870529 & 0958 526547

# MARKANDAN & CO SOLICITORS

Legal Aid

*Empowered to Administer Oaths*

**M. MARKANDAN LLB**

* All aspects of immigration matters to appeals to European court of human rights. * All types of conveyancing * Litigation * All courts Civil/Criminal * landlords/Tenants Matters * Matrimonial * Police Station Advice * All D.S.S and Housing Benefit Matters * Free Advice for 15 minutes on the first attendance.

**We are always friendly easy to talk and keen to help**

TELEPHONE
0181 514 8188

**TAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

FAX
0181 514 8303

# WARAN & Company SOLICITORS

**We are pleased to announce that we have now moved to:**

**554 HIGH ROAD, TOTTENHAM,**
**LONDON N17 9SY**
**TEL: 0181 808 2397**
**FACSIMILE 0181 801 8818**
**DX 58512 TOTTENHAM 1**

## WE UNDERTAKE

*** Civil Litigation * Commercial Litigation * Immigration * Personal Injuries * Conveyancing * Enterttainment Law * Residential & Commercial * Police Station Advice & Assistance * Accidental Claims * Matrimonial matters * Welfare benefits & Social security matters**
**For advice & Assistance on all immigration matters**

Legal Aid

**24 Hours Emergency NoS.**
**0956 543 071, 0181 924 2527**

padippakam

# ENFIELD EDUCATION & TRAINING CENTRE
## ( A DIVISION OF TRC)

**Are you aged 16-25, Living in the Borough of Enfield?
Have you unemployed for 6 months or more?**

## IF SO

# JOIN OUR FREE TRAINING

*** LEARN NEW SKILLS**
*** IMPROVE YOUR EMPLOYMENT PROSPECTS**
*** ENHANCE YOUR EDUCATIONAL POTENTIAL**
***GET A CERTIFICATE IN INFORMATION TECHONOLOGY (CITY & GUILD)**

## COURSES IN

*** IT NVQ LEVEL 1, 2 AND 3**
*** WORD PROCESSING (WORD FOR WINDOWS)**
*** DATABASE (ACCESS)**
***SPREADSHEET (EXCEL)**

**TRAVEL EXPENSES PAID**
**PAYMENT TO LONE PARENTS FOR A CHILD MINDER**

FOR MORE INFORMATION

PLEASE CONTACT
**0181 373 6246 OR 0181 345 6301**

படிப்பகம்